


786/92

சாஹெப்

# தர்கா


کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!


**உருஸ் 18**
**இதழ் 12**

ரபியுல் அவ்வல் - *1431*
மார்ச் - *2010*

**நன்கொடை : ரூ. 5/-**
**ஆண்டு சந்தா : ரூ. 50/**


## இதழின் உள்ளே ......


ஜியாரத் பணம் *2*
கண்ணியமிக்க பெண்கள் *3*
எஜமான் முஹ்யித்தீன்...! *4*
வாய்மை வரலாறு ஆன்மிப் பயண நிகழ்சி நிரல் *6*
புதையல்... *7*
மாநபியின் மணிமொழிகள் *9*
ஒட்டகனாரின் வாழ்த்து...! *10*
சிந்திக்க வேண்டிய விஷயம் *11*
ஆங்கிலப் புத்தாண்டு...? *12*
ஒரு பெருநாள் பொழுது கட்டுரைப் போட்டி...! *14*
செய்திகள் தருவது தர்கா *15*
தர்கா இதழின் சுயசரிதை www.aulia-e-hind.com *16*
பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல்
மஸ்லிஸ் உலமா செயற்குழு கூட்டம் *17*
நாயகத்தின் பெற்றோர்கள் *18*
திருமறையின் தெளிவுரை *19*
வாசகர் மன்றம்... *20*



**Owned and Published by**
M.SYED AHMED, M.A.,
74/176- A, Ist Floor, Ghandiji Road,
opp - Erattai Mastan Dargah,
Thanjavur - 613001
e-mail : dargah_tnj@yahoo.com
www.dargahtnj.blogspot.com
**Printed by**
Manickam Printers,Door No : 999,
South East Rampart,
Thanjavur - 613001

**Reg No. TNTAM/2009/30120**
**Rnp No. SSP/TJ/29/10-12/TJI**
**Posted On 5th day of the Month at Thanjavur H.O.**

**அடுத்த வெளியீடு....**
**மே - 2010**


*நாரயே தக்பீர்!*
*அல்லாஹு அக்பர்!!*

## தர்காக்கள் ஓர் ஆய்வு...!

*நாரயே ரிஸாலத்!*
*யா ரஸூலல்லாஹ்!!*

தர்காக்கள் என்பது இரண்டு வார்த்தைகள் சேர்ந்த பாரஸீக மொழியின் பெயர்ச் சொல் ஆகும்.

தர் என்றால் கதவு, நிலைவாசல், நுழைவாயில்.

காஹ் என்றால் ஸ்தலம், இடம், இருப்பிடம்.

இதன் பொருளாக்கம் அரேபிய சொல்லான الضريح என்பதாகும்.

உலகில் மிக பிரசித்திப்பெற்ற அரேபிய அகராதியான அல் முன்ஜித் இதற்கு...

கபர்-அடக்கஸ்தலம் நிர்மாணித்தல் என பொருள் கூறுகிறது.

ஆக புனித ஸ்தலத்தின் நுழைவாயில் அதாவது நல்லோரிடத்தின் நிலைக் கதவு என்ற பொருளில் நம் முன்னோர்கள் தர்கா என்று பெயர் வைத்துள்ளனர் போலும்.

நுபுவத் என்ற இறைத்தூதுத்துவம் இறுதி நபியான கண்மணி நாயகத்துடன் நிறைவுற்ற நிலையில் அல்லாஹ்வாலும், அவனது ரஸூலாலும் வழங்கப்பட்ட இஸ்லாத்தை, சஹாபாக்களும் அவர்களைத் தொடர்ந்து தாபயீன்களும் அவர்களிடமிருந்து தபவுத் தாபயீன்களும் அதைப் பின்பற்றி உலகம் முழுக்க எத்திவைத்தவர்கள் தான் இறைநேசச் செல்வர்களான அவுலியாக்கள்!

ஜாதி, இன, நிற, பேதங்களைக் கடந்து... ஏழை பணக்காரன் என்ற வித்தியாசங்களை மறந்து... நாடு, தேசம், காடு, மலை, பாலைவனம், வனாந்திரம், வெயில், மழை, குளிர், வெப்பம், என்ற நிலைகள் துரந்து...

அல்லாஹ்வின் தீனுல் இஸ்லாம் என்ற அமைதி மார்க்கத்தை எத்திவைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் ரஸூலுல்லாஹ்வின் இஷ்க் என்ற நேச ஜோதியை ஏந்தி மானுடம் சிறக்க சாந்தி சமாதானத்தை போதித்தவர்கள் அவுலியாக்கள்!

இந்த அவுலியாக்கள் என்னும் இறை நேசச் செல்வர்கள் தான் தவ்ஹீதை ஏற்றுக் கொண்டு ஷரீஅத்தை பேணி, தரீகத்தில் தரிபட்டு, ஹகீகத் என்ற ஏகத்துவத்தில் மூழ்கி, மஅரிஃபத் என்ற மகோன்னதம் அடைந்து, வஹ்தானியத் என்ற ஓர்மையில் தன்னை அழித்துக் கொண்டு, பிரபஞ்சத்தில் அல்லாஹ் ரஸூலின் உத்திரவின் பேரில் ஈ, எறும்புக்குக் கூட தீங்கு செய்யாமல் உலக மக்களுக்கு தொண்டாற்றி, அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று, பகா என்ற பரிபூர்ண நிலையை எட்டியமைக்காக அவர்களின் புனித உடல்கள் நிலை கொண்ட ஸ்தலம்-இருப்பிடம் தான் தர்காக்கள் என்று போற்றப்படுகின்றன!

சரி, எல்லோரும் இறந்து மையத்தாங் கொள்ளை மையவாடியில் அடக்கம் செய்யப்படுகிறார்களே... இவர்களுக்கு மட்டும் இவ்வளவு பெரிய பெரிய கட்டிடங்கள் ஏன்...? என்ற சந்தேகம்! நம்மில் சிலருக்கு...

ஆம் அதுவும் அல்லாஹ் ரஸூலின் உத்திரவால்தான், மார்க்க ஷரீஅத் சட்ட வழிகாட்டுதல் படி தர்காக்கள் கட்டப்பட்டு வந்தன, கட்டப்பட்டு வருகின்றன, இனியும் கட்டப்பட்டு வரும்!

அது எப்படி...?

சூரத்துல் கஹ்ஃபில்... புனித குகைவாசிகளுக்கு நிர்மாணிக்கப்பட்ட கோபுரமும்...,

கண்மணி நாயகம் அவர்கள் புனித மிஃராஜ் விண்வெளிப் பயணம் செய்த போது நபி மூஸா அவர்களை விசாலமான கப்ரு ஷரீஃபில் தொழக் கண்டதும்...,

நபி சுலைமான் அவர்கள் தன் சிம்மாசனத்தில் பறந்து கொண்டு இருந்த போது மலக்குகள் ஓர் இடத்தில் சஹன்களில் நூர் என்ற பேரொளியை பூமியில் ஓரிடத்தில் சேர்ப்பதை கண்டு என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? என்று வினவ அதற்கு, இறுதி நபி அவர்களின் உம்மத்தில் வரும் இறை நேசச் செல்வரான காஜா குத்புத்தீன் பக்தியாரே காக்கி அவர்களுக்கு இந்த ஸ்தலத்தில் கட்டிடம் (தர்கா) நிர்மணிக்க அல்லாஹ்வால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளோம் என்று பதிலளித்ததும்...

நூல் : டில்லி கே பாயீஸ் குதுப்- பக்:49, ரௌலத்துல் அக்தாப்- பக்:28

இன்னும் கோடிக் கணக்கான இறைநேசர்களான வலிமார்களின் புனித தேகங்கள் மற்ற மையத்துக்கள் போன்று மண்ணோடு மண்ணாகாமல் அப்படியே அழியாமல் இருக்கும் காரணத்தாலும், அவ்விடம் அடிக்கடி தோண்டப்பட்டு அவர்களை அவமதிக்காமல் தடுப்பதற்காகவும் தர்காக்கள் நிர்மானிக்கப்பட்டு வருகின்றன.

அல்லாஹ் ரஸூலால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இப்புனித வலிமார்களின் திருத்தலங்களில் ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டு அந்த மகான்களின் பரக்கத்தின் பொருட்டால் தங்கள் நாட்ட தேட்டங்களுக்கு வழி பிறக்கும் என்று அவர்களின் புனித தலங்களை நாடி வந்து துஆ கேட்டுப் பயனடைவது பகுத்தறிவுக்கு பொருத்தி வரும் விஷயம் தான்.

அவர்களின் புனிதத்தை அல்லாஹ் ஏற்றுக் கொண்ட பின் அவர்களை வஸீலாவாக்கினால் நம்முடைய முராதுகள் பூர்த்தியாகுமே என்ற நன்நோக்கத்தின் அடிப்படையில் கொடியேற்றங்கள், ராத்திபுகள், மௌலூதுகள், நேர்ச்சைகள், பாத்திஹாக்கள், ஷீரினி-தபர்ருக், உருஸ்-கந்தூரி என புனித விழாக்களில் மக்கள் குழுமும் போது விசாலமான இடம் தேவைப்படுவதாலும் தர்காக்கள் நிர்மானிக்கப்படுகின்றன.

இது பாவா நபி ஆதம் அலா நபியினா அவர்கள் காலம் தொட்டு எம் பெருமானார் கண்மணி நாயகம் அவர்கள் ஷரீஅத் தொடர்ந்து தர்காக்கள் வாழையடி வாழையாய் நிர்மாணிக்கப்பட்டு நாளது வரை அல்லாஹ் ரஸூலால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாய் இருக்கின்றன.

நபி இப்ராஹீம் அவர்களின் மகாமே இப்ராஹீம் என்ற கஅபதுல்லாஹ்வில் உள்ள சின்னமும், ஹாபில் காபில் தர்காக்களும், நூஹ் நபி காலத்தில் நீரூற்று பீறிட்ட அடுப்பும் (ஈராக்), சாலிஹ் நபியின் ஒட்டகம் கால் பதிந்த இடமும் (ஸலாலா), இம்ரான் நபியின் தர்கா ஷரீஃபும் (இடம் : அம்மான்) தாவூத் நபியின் தர்காவும், கண்மணி நாயகத்தின் புனித ரவ்ளா ஷரீஃபும் அதன் உள்ளே உள்ள கலீபாக்களின் ஜியாரத்துக்களும் தர்காக்கள் நிர்மானிக்கவும் அவற்றை சங்கைபடுத்தவும் தடையில்லை என்பதை பறைசாற்றுகின்றன.

இந்த தர்காக்களை நபிமார்களோ, சஹாபாக்களோ, தாபயீன்களோ, தபவுத்தாபயீன்களோ, அவுலியாக்களோ, மார்க்க அறிஞர்களோ, விஞ்ஞானிகளோ, அரசர்களோ, ஆண்டிகளோ யாருமே இம்மியளவும் எதிர்க்காமல் புனிதமாக ஏற்றுக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

எனவேதான் ஒரு உருது கவிஞன் தன் கவிதையில் எவ்வளவு நயம்பட கூறுகிறான் பாருங்கள்...

کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

இரு லோகத்தின் நன்மைகளும் இந்த வலிமார்களின் தர்காக்களில் உள்ளது!

அல்லாஹ்வின் ரஹ்மத் என்னும் அருள் அவுலியாக்களின் தர்காக்களில் உள்ளது!

நாம் தர்காக்களுக்கு வருவதால் அல்லாஹ்வின் பாதுகாப்பில் உள்ளோம்!

அல்லாஹ்வின் குத்ரத்தை இறை நேசச் செல்வர்களின் தர்காக்களில் காண்பீராக!

ஆகவே, வஹ்ஹாபிய ஜமாஅத்துகளின் வழிகேட்டிற்கு ஆட்படாமல் இறை நேசர்களான வலிமார்களின் தர்காக்களை நேசிப்போம் சூஃபியாக்களின் வழிநடப்போம்...!

***சிந்திப்போம்!*** ***செயல்படுவோம்!!*** ***வஸ்ஸலாம்!!!***

# வாருங்கள் ஜியாரத் பயணம் செல்வோம்... மஹ்மூதுபந்தர்- பரங்கிப்பேட்டை காட்டானை அப்பா வலியுல்லாஹ்

லா நபிய்ய பஅதி. எனக்குப் பின்னர் நபியில்லை என்ற பெருமானார் அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களது போதனைக் கொப்ப நுபுவத் முற்றுப் புள்ளியைக் கொண்டு விலாயத் தொடர்ந்திட, வலிமார்கள் ரஸூலின் ஜோதியை ஏந்தி மார்க்கப் பணியினைச் செய்தார்கள். வலிமார்கள் எந்த ஒரு உச்சகட்ட நிலையிலும் தாங்கள் அல்லாஹ்வின் அடிமை என்ற உணர்வை இழக்காமல் ஷரீஅத்தை கடைபிடித்து தரீகத்தில் தரிபட்ட வர்களாய் புடம் போட்ட தங்கமாய் ஜொலித்தார்கள்.

வல்ல நாயன் ரஹ்மானின் உள சித்தத்தின் படியே வாழ்வை அமைத்துக் கொண்ட மாபெரும் இறைநேசர்களான வலிமார்களின் கராமத் என்னும் அற்புதம் கூட அவன் நாட்டப்படியே நிகழ்பவையே! அவ்வலிமார்கள் தம் இதய மாளிகையில் உஜூது என்னும் உள்ளமையை தரிசித்திடும் அவர்கள், அனைவர்களது கல்பிலும் அல்லாஹ்வை நிலைநிறுத்துதலையே கராமத்தாகக் கருதினர்.

அல்லாஹ்விடம் கலப்பில்லாத பூர்ண விசுவாசங் கொண்டு, நபிகள் நாதர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது அபிமானங் கொண்டு பக்தி வணக்க முள்ளவர் (முத்தகீன்)களாக இருப்போரே அல்லாஹ்வின் நேசர்! (அவ்லியாக்கள்) ஆவார்கள். அத்தகைய ஆன்மீக பேரரசர்களான வள்ளல் பெருமான்களின் புனித சன்னிதானத்தில் நாமும் பயன் பெறுவோமாக.

இஸ்லாம் என்னும் சத்திய மார்க்கத்திற்கு தூணாக நின்ற கலீபாக்களான தோழர்கள்-சஹாபா பெருமக்கள் நால்வரில் முதல் இடம் வகித்த சத்தியவந்தர் செய்யதினா அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் வழித்தோன்ற லுமாகிய அஷ்ஷைகுல் மஷாயிக் காட்டானை அப்பா என்ற ஷைகு அப்துல் காதர் ஆண்டகையவர்கள் சுமார் 300 வருடங்களுக்கு முன் வாழ்ந்த பெருந்தகையாவர்கள்.

ஏறக்குறைய சுமார் 360 வருடங்களுக்கு முன் மஹான் அஷ் ஷைகுல் மஷாயிக் காட்டானை ஷைகு ஜமாலுத்தீன் ரஹிமஹுமுல்லாஹ் காதிரி தம் பூர்வீகமான சுமத்ரு அச்சஹ் என்னும் இடத்தில் யாமூரா, யாமூரி என்ற இரு மலைகளுக்கிடையில் வல்ல நாயனை எண்ணி ஊண் உறக்கமின்றி 12வருடங்கள் கடுந்தவத்தில் நிலைத்த வர்களாக இருந்து நிறைவு பெற்று உலகின் கண் திரும்புகிறார்கள். அவ்வேளையில் அவர்கள் நாடிய இடத்திற்கு அம்மலையிலிருந்து சுமந்து செல்ல தயார் நிலையில் காட்டு யானை ஒன்று இருக்கக் கண்டு அச்சஹ் என்ற நாட்டை அடைகிறார்கள். தவ்ஹீதின் மஃரிபா தத்துவப்படி ஏக தத்துவத்தை போதிக்கவல்ல ஞான உபதேசம் செய்து வருங்கால் அந்நாட்டு மன்னராகிய சுல்தானை சந்திக்க நேரிடுகிறது. அவர்களிடம் ஞான உபதேசம் பெற்ற அம்மன்னர் தம் மகளான செய்யிது பாத்திமாவை திருமணம் புரிந்து கொள்ளும்படி விண்ணப்பம் செய்கி றார்கள். ஏகனின் நாட்டமும் அதுவாக வே இருக்க திருமணம் புரிந்து இல்லறத்தில் இணைகிறார்கள்.

சுக போக வாழ்வை வெறுத்து தம் துணைவியுடன் அச்சஹ் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். துறவறத்தை பூண்டவர்களாக பல தேசங்களை சுற்றி வரும் போது தான் செய்யதுஸ் சாதாத் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகமவர்களை நாகூர் தர்காவில் ஜியாரத்து செய்கிறார்கள். தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாமையைக் குறித்து துஆ செய்கிறார்கள். 40 நாட்கள் தவக்கோலம் பூண்ட பின் நிறை மாதத்தில் ஆண் குழந்தை பிறக்கும். அக் குழந்தைக்கு அப்துல் காதிர் எனப் பெயரிட வேண்டும். மேலும் அக்குழந்தை என்னுடையதாக இருக்கும்! என பாதுஷா நாயகம் காட்சி தந்து ஆசி கூறி அனுப்புகிறார்கள்.

இறுதியாக ராமநாதபுரம் (மண்டபம் கேட்) என்னும் வேதாளையில் உள்ள அடர்ந்த காட்டில் வந்து தங்குகிறார்கள். அங்கே தவக்கோலம் ஏற்று 40 நாட்கள் இருப்பில் அமர்ந்த அவர்கள் அக்காட்டு விறகுகளை வெட்டி சுமந்து ஜீவனம் நடத்தி வரும் சமயம் தவத்தின் சேயான ஷைகு அப்துல் காதிர் பிறக்கிறார்கள். பிறப்பிலேயே ஆன்மீக உணர்ச்சியுடைய தம் தந்தையின் போதனையில் வளர்ந்து அகமியக் கலையில் தேர்ச்சி பெற்ற பின் அகமிய ஞானத்தை போதிக்க வல்லவராக இருக்கும் பொருட்டு கிலாஃபத் என்னும் உத்திரவு வழங்குகிறார்கள். தம் தந்தையால் மறைஞானம் உணர்ந்து தீட்சை அளிக்கும் ஆசானாகத் திகழ்ந்தார்கள்.

மேலும் இஸ்லாத்தின் எளிய தெளிவான கொள்கைகளும், ஒழுக்க

நெறிகளும் சத்தியமும் உண்மையும், பொறுமையும் உலக மக்களை இஸ்லாத்தின் பால் ஈர்த்துக் கொண்டிருப்பதாலே தான் இஸ்லாம் மென்மேலும் வளர்வதுடன் பரவும் திசையெங்கும் வலுவாக காலூன்றி செழித்தோங்குகிறது.

தாய் தந்தை மறைவுக்குப் பின் தன் அகமிய தந்தையான நாகூர் நாயகத்தின் தர்காவுக்கு சென்று அப்போது அங்கிருந்த தாம்பூலத் தானவர்களிடம் தான் தவத்தாலானவன் என்பதை சொல்லி தனது வழிமுறைகளை விளக்குகிறார்கள்.

தனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு என்றும், ஒன்று தாம்பூலத்தால் மற்றொன்று தவத் தால் என்பதை பாதுஷா நாயகம் தம் ஜீவித காலத்தில் சொன்னதை அங்கிருந்தவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இதன் பின் நாகூரிலிருந்து காணிக்கை என்னும் பஹ்ரத் வழங்கி வந்திருக்கிறார்கள். இம்முறை காட்டானை ஷைகு அப்துல் காதிர் ஆண்டகையவர்களின் 5வது தலைமுறை வரை இருந்து வந்தது. காலப்போக்கில் இம்முறை நின்றுவிட்டது.

நபிமார்களிலிருந்தும், சத்திய வான்களிலிருந்தும், தியாக சீலர்களிலிருந்தும் உத்தமர்களிலிருந்தும்



ஹஜ்ரத் காட்டானை வலியுல்லாஹ் தர்காஹ் ஷரீஃப்
புகைப்பட உதவி ஜனாப் சலீம்-பரங்கிப்பேட்டை

அல்லாஹ்வால் சன்மானமளிக்கப்பட்டவர்களுடன் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிபட்டு நடப்பவர்கள் சேர்ந்திருப்பார்கள். மேலும் இவர்களே (இறைவனுடைய) அழகான தோழர்கள்.

**குர்ஆன்- அன்னிஸா-4:69**

குறிப்பாக இந்தியாவில் மகான்களும், சூபியாக்களும் இஸ்லாம் பரவ முக்கியக் காரணமாக இருந்தார்கள் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

ஹஜ்ரத் அவர்கள் ஷவ்வால் பிறை 9ல் பரங்கிப்பேட்டையில் அடக்கமாகி இருக்கிறார்கள். இன்று வரை இவர்களது சில்சிலா தொடர்கிறது. 300க்கும் மேற்பட்ட இறைநேச செல்வர்கள் அடக்கமாகியிருக்கும் புனித நகரமாம் பரங்கிப்பேட்டைக்கு நேரம் கிடைக்கும் போது சென்று வந்து நன்மைபெற்று உங்கள் பயண அனுபவங்களை எமக்கு கார்டில் எழுதுங்களேன்.

**எப்படி செல்வது?**

தஞ்சையிலிருந்து சிதம்பரம் சென்றால் அங்கிருந்து பரங்கிப் பேட்டைக்கு டவுன் பஸ்களும் ரூட்பஸ்களும் உள்ளன. பரங்கிப் பேட்டையில் வாத்தியாப் பள்ளி தெருவில் ஹஜ்ரத் அவர்களின் தர்கா அமைந்துள்ளது. ஒருநபர் சென்று வர ரூ.100/- க்குள்ளாகவே ஆகும்.

# கண்ணியமிக்க பெண்கள்

## அன்னை மரியம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சிறப்பான வரலாறு

மரியாதை மிகுந்த வாசகப் பெருமக்களே! இப்பகுதியில் நபிமார்களின் புனிதமிகு மனைவியர்களின் வரலாறுகளை பார்த்து வந்தோம். அவர்கள் வாழ்ந்து காட்டிய பற்பல நடைமுறைகள் நமக்கு படிப்பினையாக இருந்தன. ஒரு சிலரைத் தவிர மற்ற நபிமார்களின் மனைவியர் எல்லோரும் தூய்மையின் சின்னமாக பாடம் கற்க வேண்டிய பல்கலைக் கழகங்களாகவே வாழ்ந்து வந்தனர் என்பது அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு பறைசாற்றுகின்றன.

நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நிக்காஹ்விற்கு முன்பே அவர்களின் எதிரிகளான யூதர்களின் காட்டிக் கொடுக்கும் வஞ்சகத்தின் கொடுமையால் வானத்திற்கு உயர்த்தப் பட்டார்கள் என்ற நிகழ்ச்சி குர்ஆனும், தப்ஸீர்களும் நமக்கு தருகின்றன.

தவிர நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் திரும்ப உலகத்தில் இறக்கப் படுவார்கள் என்றும், பின் நபிகள் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உம்மத்தியாக நிக்காஹ் செய்து ஷரீஅத்தே முஹம்மதியாவை பின்பற்றுவார்கள் என்பதையும் எம்பெருமானார் அவர்கள் அல்லாஹ்வின் நாட்டத்தால் மறைவான விஷயங்களை அறிந்து அறிவித்த கியாம அடையாள ஹதீஸ்கள் மூலம் தெரிய வருகிறது.

எனவே நபி ஈஸா அவர்களின் நினைவு வரும் போதும், அவர் உதித்த வரலாற்று உண்மைகளை ஆராயும் போதும் அற்புதம் நிறைந்த சரித்திரம் நமக்கு கிடைப்பதை பாருங்கள்.

தித்திக்கும் திருமறையின் வசனங்களில் பெண்களைப் பற்றிய இடங்களில் சரித்திர சம்பவங்கள், வாழ்க்கை நிகழ்வுகள் இன்னும் அவர்களைப் பற்றிய சட்டத் தொகுப்புகள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன என்றாலும் 6666 ஆயத்துகளில் எந்த ஒரு பெண்மணியின் பெயரையும் ஒரு போதும் குர்ஆன் குறிக்கவேயில்லை. ஆனால் விதிவிலக்காக ஒரு பெண்ணின் பெயர் குறிக்கப்படுகிறது. அது அன்னை மர்யம் அவர்களின் பெயர் மட்டுமே! அது மாத்திரமல்ல அவர்களின் மேன்மையையும் புனிதத்தையும் நிலை நிறுத்தும் பொறுட்டு அவர்களின் பெயரில் ஒரு சூராவே இறக்கி வைத்து விட்டான் வல்ல ரஹ்மான்.

அன்னை மர்யம் அவர்களின் பிறப்பு கூட அதிசயமான ஒன்று என்பதை தப்ஸீர்கள் நமக்கு இப்படி எடுத்து இயம்புகின்றன.

நபி ஜக்ரிய்யா அலைஹிஸ் ஸலாம் அவர்களும், நபி இம்ரான் அலைஹிஸ் ஸலாம் அவர்களும் சகலர் ஆவர். ஹின்னாவும், யேஷியாவும் சகோதரிகள் ஆவர். ஹஜ்ரத் இம்ரான் அவர்கள் ஹின்னா அவர்களையும், ஹஜ்ரத் ஜகரிய்யா அவர்கள் யோஷியா அவர்களையும் நிக்காஹ் செய்திருந்தார்கள். ஹஜ்ரத் இம்ரான் ஹின்னா தம்பதியருக்கு நீண்டகாலம் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது.

வயோதிகத்தின் காரணமாக நம்பிக்கையும் பொய்த்து விட்டது. ஆனால் இந்த குடும்பம் புனிதர்களின் குடும்பமாக இருந்தது. அல்லாஹ்வின் கருணை அவர்களின் மீது அளப்பரிய இருந்தது. ஒரு நாள் பீபி ஹின்னா அவர்கள் ஒரு மரத்தின் கீழ் நிழலிற்காக ஒதுங்கிய போது அம்மரத்தில் ஒரு குருவி தன் குஞ்சுக்கு இரை புகட்டி குதூகலித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஹின்னா அம்மையார் அவர்களின் மனம் தாய்மைக்கு ஏங்கி, வல்ல நாயனே எனக்கு குழந்தை பாக்கியத்தை வழங்குவேயானால் அக்குழந்தையை உன் திருஇல்லமான பைத்துல் முகத்தஸில் பணி செய்ய கொடுத்துவிடுவேன் என்று முராது கொண்டு மனதில் நிய்யத் செய்தார்கள்.

அன்னையார் கேட்ட அந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டு குழந்தை பாக்கியம் அவர்களுக்கு உண்டானது. அந்த நிய்யத்தை அவர்களின் கணவரான இம்ரான் அவர்கள் செவியுற்ற போது ஓ, நீர் என்ன நிய்யத்து செய்து கொண்டீர்!? நமக்கு பெண் குழந்தையாயின் பைத்துல் முகத்தஸில் திருப்பணி செய்ய எப்படி ஏதுவாகும்? என்று விசனங் கொண்டார்கள். ஏனெனில் பெண்களுக்கு அல்லாஹ் இயற்கையாக கொடுத்து உள்ள நிலைமையின் காரணமாகவும் அவர்களுக்கான விலக்கு நாட்களையும் கணக்கில் கொண்டே ஹஜ்ரத் இம்ரான் அவர்கள் கவலை கொண்டார்கள்.

ஹின்னா அம்மையார் அவர்களின் குழந்தை பிரசவத்திற்கு முன்பே ஹஜ்ரத் இம்ரான் அவர்கள் வஃபாத்தாகி விடுகிறார்கள். பீபி ஹின்னா அவர்கள் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுக்கிறார்கள். அக்குழந்தையே பீபி மர்யம் அலைஹிஸ் ஸலாம் ஆவர்கள். மர்யம் என்ற சொல்லுக்கு ஹீப்ரு மொழியில் புனிதத்திற்குரியவர் என்றே அர்த்தமாகும்.

**ஆதாரம்: கஸாயினுல் இர்பான்**

அன்னை மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் எப்படி புனிதத்துவம் நிறைந்து இருந்தார்கள் என்பதை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்!

அனல் வாஹிதுல் ஃபர்துல் கபீரு பீ ஜாத்திஹி...!

# எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகையின் வரலாற்றினிலே...!

**பார்வைகள் இருவிதம்!**

இந்த உலகில்- இந்த உலகம் உட்பட இதைப் போன்று பல்லாயிரம் கோள்களை உள்ளடக்கிய அண்ட சராசர பிரபஞ்சத்தில் - எல்லா இடங்களிலும் - எல்லா காலங்களிலும் - எல்லா நேரங்களிலும் - நடக்கும் எல்லா செயல்களும் - விளைவுகளும்...

ஒப்பற்ற ஒரே உள்ளமையான (ஹக்கான) ஆதிபரம்பொருளான - இறைவனான அல்லாஹ் ஒருவனின் நாட்டப்படி தான் அனைத்துமே நடைபெறுகின்றன.

அவன் அல்லாத ஒரு பொருளும் இல்லை. அவன் நாடாத ஒரு செயலும் இல்லை!

எந்த காலத்தில் - எந்த உலகில் எந்தப் பகுதியில் எது நடந்தாலும் - சூழன்றடிக்கும் சூரைக்காற்றடித்தாலும் -சுனாமியே வந்தாலும் - பெருமழை பெய்தாலும் - பிரளயமே வந்தாலும்...

காலம் தவறிய மழை - பனி - வெப்பம் - கடும் பஞ்சம் -பூகம்கம்- பெரும் பிணிகள்...

உலக நாடுகளில் - அரசியலில் ஆட்சி மாற்றங்கள் - அவல நிலைகள் - ஏற்றத் தாழ்வுகள் - சமீப கால சமூக நன்மை தீமைகள் எல்லாமே ஒரே நாயனின் நாட்டப்படி தான் நடக்கின்றன!

இதில் அணுவளவும் சந்தேகமே இல்லை!

இந்த பிரம்மாண்டமான பிரபஞ்சத்தின் அன்றாட நிலைகளில் இருந்து அவ்வப் போது நிகழும் அசாதாரண சம்பவங்கள் வரை அனைத்தையும் நடத்தி வைக்கும் இறைவன் இந்த பிரபஞ்ச நிர்வாகத்திற்காக தன்னுடைய நேசர்களில் இருந்து தேர்ந்தெடுக்கும் அப்தால்கள் என்ற தன் பிரதிநிதிகள் மூலமாக பிரபஞ்ச நிர்வாக செயல்பாடுகளை நடத்திவைக்கிறான்!

இந்த இறைப் பிரதிநிதிகள் எல்லா காலங்களிலும் 40 பேர்கள் இருப்பார்கள். இதிலே 3 பேர்கள் ஹயாத்து நபிகள் என்ற சிரஞ்சீவிகள்! 37 பேர்கள் இறை நேசர்களான வலியுல்லாகஹ்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் படுவார்கள்!

இதிலே ஒருவர் காலம் முடிந்து இறையடி சேர்ந்து விட்டால் உடனே அந்த இடத்திற்கு மற்றொரு இறை தோழர், அப்தால் ஆக உயர்த்தப்படுவார்!

இறைத் தோழர்களான வலியுல்லா ஹ்க்களிலிருந்து ஒரு அப்தால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்றால்...

**வஹ்ததுஷ் ஷுஹூத் – துவைதம் :**

முதலில் அதை அல்லாஹ் நாடுவான் - அல்லாஹ் நாடியவர்களுக்கு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளாசி வழங்குவார்கள் - அடுத்து விலாயத் வேந்தர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் அவரை அப்தால் ஆக நியமனம் செய்வார்கள் - இந்த நியமனத்தை ஹயாத்து நபியாகிய கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஆலம் அர்வாஹ்வில், ரிஜாலுல் கைப் என்ற மறைவான உலகத்திலும், அனைத்து உலகங்களிலும் பகிரங்கமாக அறிவிப்பார்கள்!

இது ஷரீஅத்தின் வஹ்ததுஷ் ஷுஹூது என்னும் பொதுப் பார்வை.

**வஹ்ததுல் உஜுது – அத்வைதம்:**

நாடிய அல்லாஹ்வும், அருளாசி வழங்கிய நபிகள் கோமான் அண்ணல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், நியமனம் செய்த வலிமார்கள் கோமான் வள்ளல் முஹ்யித்தீன் எஜமானும் ஒன்றே என்பது மஅரிஃபத்தின் வஹததுல் உஜூது என்னும் ஞானப்பார்வை!

40 ஆண்டுகால நெடும் நோன்பை நிறைவேற்றி தம் 50வது வயதில் நிகரற்ற தவராஜ சிங்கமாகத் திகழ்ந்த மெய்ஞான சூரியன் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் பிற்காலத்தில் பெரும்பாலான நாட்களில் நோன்பில்லாத நாட்களில் ஒரு நாளைக்கு தமக்குரிய 3 ரொட்டிகளில் 1½ரொட்டியை எளியவர்களுக்கு கொடுத்துவிட்டு மீதமுள்ள 1½ ரொட்டியை மட்டுமே உண்பார்கள்.

அபூர்வமாக சில நாட்களில் பொறித்த கோழிக் கறியையும் உண்பார்கள்!

அதைப்போலவே எப்பொழுதும் மிகமிக எளிய உடைகளையே அணியும் எஜமான் சில நேரங்களில் அற்புதமான உயர்ந்த ஆடைகயும் அணிவார்கள்.

காய்ந்த ரொட்டியையும்-பொறித்த கறிவகைகளையும், சாதாரண எளிய உடைகளையும்-கண்கவர் புத்தாடை களையும் ஒன்று போல் பார்க்கிற சம நோக்கு அது!

**திருடச் சென்றவர் தவ்பா செய்து அப்தால் ஆன வரலாறு...!**

முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் வாரத்தில் 3 நாட்கள் தங்கள் தலைசிறந்த தௌஹீது ஞான தத்துவார்த்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும் போது வெகு தூரங்களிலிருந்தும் சுமார் 75,000க்கும் மேற்பட்ட மக்கள் பெரும் திரளாக குவிவார்கள். அதில் எல்லா வகை மனிதர்களும், எல்லா மார்க்கத்தினரும் இருப்பார்கள்.

ஒரு நாள் முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் தங்கள் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையில் முன்புற திடலில் சொற்பொழிவாற்றும் போது, கூடிய கூட்டத்தில் திருட்டையே தொழிலாகக் கொண்ட ஒரு நபரும் இருந்தார்.

அன்று முஹ்யித்தீன் ஆண்டகை மிகவும் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார்கள். அந்த நபர் முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் உடைகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் மனதிலே நினைத்தார்... இவர் உடுத்தியிருக்கும் இந்த உடைகளே இவ்வளவு உயர்வாக இருந்தால் இவர் இருப்பிடத்திலே எவ்வளவு பொன்னும் பொருளும் இருக்கும். எப்படியும் இன்று இரவில் இவர் இருப்பிடத்திலே நுழைந்து கொள்ளையடிக்க வேண்டும் என்று உறுதிபூண்டார்.

அன்று இருட்டிய பிறகு அந்த நபர் முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையின் உள்ளே பின்புற வாசல் வழியாக நுழைந்து விட்டார்.

உள்ளே நுழைந்ததும் அவர் இரு கண்களும் குருடாகிவிட்டன!

திடுக்கிட்டார்-திகைத்தார்- பெரிய பாவம் செய்ய நினைத்தோமே என வேதனைப்பட்டார்!

வேறு வழியில்லாமல் ஆண்டவன் விட்ட வழியாகட்டும் என்று ஒரு மூலையில் அப்படியே முடங்கிக் கிடந்தார். நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

அன்று நள்ளிரவு உலகில் ஜீவித்திருக்கும் நபியாகிய கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வந்து முஹ்யித்தீன் எஜமான் அவர்களைச் சந்தித்து, எஜமானே! இன்று ஒரு அப்தால் இறையடி சேர்ந்து விட்டார். அவருக்கு பதிலாக ஒரு புதிய அப்தாலை தாங்கள் அருள்கூர்ந்து நியமனம் செய்யவேண்டும்! என்று பணிவோடு கூறி நின்றார்.

முஹ்யித்தீன் எஜமான் தம்முடைய ஒரு முரீதை அழைத்து நம் தவச்சாலையில் தென் கிழக்கு மூலையில் ஒரு மனிதர் கண்பார்வை இல்லாமல் வீழ்ந்து கிடக்கிறார். அவரை இங்கே அழைத்து வாருங்கள்! என்று கூறினார்கள்.

அந்த முரீது அங்கே சென்றார். யாருக்கும் எதுவும் புரியவில்லை!

சில நிமிடங்களில் அந்த நபரை முரீது அழைத்துவந்தார்!

முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் முன் வந்து நின்றதும் அவருக்கு உடனே கண்பார்வை வந்துவிட்டது!

மெய்ஞானக் கதிரவனின் முன்னால் எந்த இருள்தான் நிற்க முடியும்!

அந்த நபரை கிழறு அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் காட்டி முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் கூறினார்கள்...

இவர் இன்று நம் இடத்திலிருந்து

எதையாவது கொண்டு போக வேண்டும் என்று வந்தார். நம் இடத்திற்கு வந்த யாரும் வெறும் கையோடு திரும்பக்கூடாது. எனவே நாம் இப்பொழுதே இவருக்கு விலாயத் வழங்கி இவரை அந்த அப்தால் பதவிக்கு நியமனம் செய்கிறோம்! என்று கருணைமொழி பகன்றார்கள்!

**அருளாட்சி புரியும் ஆன்மீக வேந்தர்!**

முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் ஒரு நாள் தங்கள் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையில் தங்கள் தனி அறையில் துயில் கொண்டிருந்தார்கள்.

அப்படி எஜமான் துயிலிலே இருக்கும் போது அந்த இடத்திலே முரீதுகள் பலர் எஜமானின் சேவைக்காக காத்துக்கொண்டிருப்பார்கள்.

நள்ளிரவு நேரங்களிலே முஹ்யித்தீன் எஜமான் திடீரென்று துயில் களைந்து எழுந்திருப்பார்கள். ஒழு செய்ய விரும்புவார்கள். அந்த நேரங்களில் அவர்களுக்கு கூஜாவில் நீர் எடுத்துக் கொண்டுவந்து கொடுக்கும் பாக்கியம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று பல நேசர்கள் தவம் கிடப்பார்கள்.

அன்று பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையில் தங்கள் தனி அறையில் சயனித்திருந்த சர்தார் முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் நள்ளிரவில் திடீரென்று எழுந்தார்கள், இதை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தர்வேஷ் உடனே எழுந்து சென்று கூஜாவில் நீர் எடுத்துக் கொண்டுவந்தார்.

முஹ்யித்தீன் எஜமான் தவச்சாலையின் பின்புறத்தை நோக்கி நடந்தார்கள்.

எஜமான் ஒழு செய்யும் இடத்தில் நிற்கவும் இல்லை, அமரவும் இல்லை. நேராக பின்கட்டை நோக்கி போய்க் கொண்டே இருந்தார்கள்.

பின்னால் வந்த தர்வேஷும் தம் கையில் இருந்த நீர் கூஜாவை கீழே வைத்து விட்டு ஏதோ மந்திரசக்திக்கு கட்டுப்பட்டவர் போல் அப்படியே முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் பின்னாலேயே போய்க்கொண்டு இருந்தார்.

முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் தங்கள் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையை விட்டு வெளியேறி நேராக பக்தாத் மாநகரின் தலைவாசலுக்குச் சென்றார்கள். உடன் வந்த தர்வேஷும் பின்தொடர்ந்தார். தலைவாசலை நெருங்கியதும் முஹ்யித்தீன் எஜமான் தங்கள் மகத்தான மலரடியைத் தூக்கி தலைவாசலின் வெளியே வைத்தார்கள். உடன் வந்த தர்வேஷும் அப்படியே செய்தார். அவ்வளவுதான்...

தலைவாசலும் பக்தாத் மாநகரக் காட்சிகளும் அப்படியே அடியோடு மறைந்துவிட்டன!

ஏதோ ஒரு புதிய உலகத்தில் புதிய தேசத்தில் தாங்கள் இருப்பதை தர்வேஷ் அவர்கள் உணர்ந்தார்!

தான் இது வரை கண்டும் கேட்டுமிராத புதிய விதமான தோற்றமும், நிறமும் கொண்ட மனிதர்கள் அங்கே நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிய மொழியும் புரியவில்லை!

தர்வேஷுக்கு பெரும் திகைப்பு! பணிவுடனும் பக்தியுணர்வுடனும் தர்வேஷ் அவர்கள் பராபரத் திருமேனி எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களை பின்தொடர்ந்தார்கள்.

எஜமான் அங்கே ஒரு பெரும் மாளிகையின் உள்ளே நுழைந்தார்கள். உள்ளே யாரோ லேசாக அழும் விம்மல் குரல் கேட்டது!

சிறிது நேரத்தில் யாரோ இறந்த ஒரு மனிதரின் ஜனாஸாவை அங்கிருந்து வெளியே எடுத்துச்சென்றார்கள்!

அடுத்து சிலர் பரட்டைத் தலையும் தாடி, மீசையும் கொண்ட உயரமான ஒரு மனிதரை அழைத்து வந்து எஜமான் முன்னிலையில் நிறுத்தி வணங்கினார்கள்!

அந்த மனிதரும் எஜமான் முன்னிலையில் பணிந்து வணங்கினார்!

அவர்களை நோக்கி அவர்கள் அழைத்து வந்த மனிதரைக் காட்டி எஜமான் ஏதோ உத்தரவிட்டார்கள்!

மீண்டும் அவர்கள் அந்த மனிதரை அழைத்துச் சென்றார்கள்!

சிறிது நேரத்தில் மீண்டும் அவரை அழைத்து வந்தார்கள்!

ஆனால் அவர் இப்போது வேறு மாதிரி புத்தாடை அணிந்து தாடி, மீசை, சிகை திருத்தி புதிய பொழிவுடன் இருந்தார்!

கைக்கொடுத்துக் காக்கும் கருணைக் கடல் கௌஸுல் ஆலம் தஸ்தகீர் ஜீலானி ஆண்டகை அவர்கள் அண்ட சராசரங்களையெல்லாம் ஆளும் தங்கள் அஹ்தானியத்தின் அருட் பார்வையால் அவருக்கு அருளாசி வழங்கிவிட்டு எஜமான் அங்கிருந்து புறப்பட்டார்கள்!

முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் தங்கள் பொற்கமலப் பாதார விந்தத்தை அந்த மாளிகையில் இருந்து வெளியே வைத்ததும் எஜமானும் தானும் பக்தாத் மாநகரத்தில் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையில் இருப்பதை அந்த தர்வேஷ் உணர்ந்தார்!

அவருக்கு அடக்க முடியாத ஆச்சரியம்- அதிர்ச்சித்திகைப்பும், ஆனந்தமும் கலந்த இனம் புரியாத திக் பிரமை!

திகைத்து நின்ற அந்த தர்வேஷை நோக்கி முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் இப்படிச் சொன்னார்கள்...

நாம் இப்பொழுது சென்றது இன்ன தேசம்- இன்ன நகரம் - அவர்கள் இன்ன இனம் - அவர்கள் பேசியது இன்ன மொழி. அவர்கள் அனைவரும் நம் நேசர்கள்.

இதுவரை அங்கே இருந்த ஒரு அப்தால் இறையடி சேர்ந்து விட்டார். அவரின் ஜனாஸாவை வெளியே கொண்டு சென்றார்கள்.

அடுத்து நம்மீது மிகவும் நேசம் கொண்ட ஒரு கிருஸ்துவ நண்பரை அழைத்து வந்தார்கள். நாம் சொன்னபடி அவரை மீண்டும் அழைத்துச் சென்று அவரின் தாடி, மிசை, சிகைகளைத் திருத்தி அவருக்கு புத்தாடை அணிவித்து அவரை மீண்டும் நம்மிடம் அழைத்து வந்தார்கள்.

நம்மீது ஈமான் கொண்ட நம் நேசரான அவரை அந்த அப்தால் பதவியில் நியமித்து விட்டுவந்தோம்! என்று முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்!

அன்று அந்த அப்தால் நியமனத்திற்காக முஹ்யித்தீன் எஜமான் சென்ற நாடு நகரம் எது? அன்று அங்கே பேசிய மொழி எது? என்ற விவரம் எல்லாம் நமக்குத் தெரியாது. உடன் சென்ற அந்த பாக்கியசாலியான அந்த தர்வேஷுக்குத் தெரியும்.

**பாதம் பட்ட புனிதத் தலங்கள்:**

முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் அன்று சென்ற தேசம் நம் இந்தியாவாக இருக்கலாம்! அன்று அங்கு பேசிய மொழி நம் தமிழாகவும் இருக்கலாம்! அன்று முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் வருகைபுரிந்த ஊர் நம் தஞ்சாவூராகவும் இருக்கலாம்! நம் பொட்டல்புதூராகவும் இருக்கலாம்! நம் மதுரையாக இருக்கலாம்! திண்டுக்கல் - இடையக் கோட்டையாகவோ, திருச்சி - புலிவலமாகவோ, கவின்ஞான காயல் பட்டிணமாகவோ, கீழக்கரையாகவோ இருக்கலாம்! இன்னும் நம்முடைய எந்த ஊராகவும் இருக்கலாம்!

ஆக ஒன்று மட்டும் நிச்சயம்! இப்படி அப்தால்களை நியமிப்பதற்காக முஹ்யித்தீன் எஜமான் எல்லா காலங்களிலும் இந்த பிரபஞ்சத்தில் எங்கெங்கும் வருகை புரிந்திருக்கலாம்! இனியும் வருகை புரியலாம்!

ஆக, ஆன்மீகப் பேரரசர் - ஆருயிர் இரட்சகர் நம் உயிரின் உயிரான உன்னத எஜமான் - நம் தாய் தந்தையை விட இனிய உறவான தௌஹீது நாயகர் - கண்ணின் மணியான கௌஸுல் ஆலம்- கைக் கொடுத்துக் காக்கும் கருணைக் கடலான தஸ்தகீர் ஜீலானி முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் மகத்தான பொற்கமலப் பாதார விந்தத்தில் மஹலருத்து என்ற புனித நிழல் படாத இடங்கள் இப்பூவுலகில் இல்லை! பிரபஞ்சத்திலும் இல்லை!

***தீன் தீன் என முயித்தீனில் மூழ்கியிருக்கும் முஹ்யித்தீன் அடிமை.***
***10.02.2010***



<u>*அனல் வாஹிதுல் பார்துல் கபீரு ஃபீ ஜாத்திஹி*</u>

**ஆன்மீகப் பேரரசர் விலாயத் வேந்தர் மெய்ஞான ராஜ மகுட தவராஜ ராஜர்**

# முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் மகத்தான வாய்மை வரலாறு

**முஹ்யித்தீன் அடிமை**

**அல்ஹாஜ் முஹ்யித்தீன் ஷாஹுல் ஹமீத் காதிரி** அவர்களின்சிறப்பு சொற்பொழிவுகள்

ஹிஜ்ரி 1431 புனித ரபீயுல் ஆகிர் & ஜமாதுல் அவ்வல். 2010

ஆன்மீகப் பேரரசர் முஹ்யித்தீன் ஆண்டகை ஆன்மீகப் பேரவை, முஹ்யித்தீன் மாளிகை,

கும்மிடிப்பூண்டி. செல் : 9894075720

## நிகழ்ச்சி நிரல் பட்டியல்

**ரபீயுல் ஆகிர் மாதம் :**

பிறை 1 17.03.2010 புதன் இரவு முஹ்யித்தீன் மாளிகை, மஸ்ஜிதே பக்தாத் கும்முடிபூண்டி. அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் , கௌஸிய்யா ஸலவாத்,குத்பிய்யா ஷரீப் ஓதும் நிகழ்ச்சி.

பிறை 2 18.03.2010 வியாழன் மாலை ஹக்கீம் ஷிஃபாஜி அப்துர் ரஹ்மான் காதிரி ஷிஃபா மன்ஜில் வில்லிவாக்கம்.

பிறை 3 19.03.2010 வெள்ளி காலை முதல் இரவு வரை முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் 959வ (ஆங்கிலக்கணக்கு) பிறந்த தினப் பெரு விழாவும், முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் ஆன்மிகப் படைவீரர்களான வலியுல்லாஹ்களின் உலகப் புகழ் பெற்ற தர்காக்களின் புகைப்படங்களின் சிறப்புக் கண்காட்சியும், அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் மற்றும் கௌஸிய்யா ஸலவாத் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. காதிரிய்யா தவச்சாலை, முஸ்லிம் நகர், (பொன்னேரி) மாதவரம்.

பிறை 4 20.03.2010 சனி மாலை புஹாரி பவுண்டேஷன் சார்பில் சென்னை எழும்பூர் இம்பீரியல் வளாகம் ஃபைஜ் மஹால் சைய்யிது உமறுப்புலவர் ஹாலில் குணங்குடி போற்றும் கோமான் முஹ்யித்தீன்.

பிறை 5 21.03.2010 ஞாயிறு காலை சென்னை அடையார், புஹாரி இல்லம் முஹ்யித்தீன் ஆண்டகை திருக்கொடி ஏற்றல். இரவு அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் நிகழ்ச்சி. ஹமீது அவுலியா தர்கா ஷரீஃப், காஞ்சிபுரம்.

பிறை 6 22.03.2010 திங்கள் காலை அரக்கோணம், இரவு முஹ்யித்தீன் மாளிகை, கும்முடிப்பூண்டியில் அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி.

பிறை 8 24.03.2010 புதன் கிருஷ்ண கரணை.

பிறை 10 26.03.2010 வெள்ளி மாலை மஹ்பூபு ஸுப்ஹானி கந்தூரி கமிட்டி, கூத்தாநல்லூர்.

பிறை 11 27.03.2010 சனி மாலை முஹ்யித்தீன் ஆண்டகை கந்தூரி பெரு விழா. அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. புலிவலம், திருச்சி வட்டம்.

பிறை 12 28.03.2010 ஞாயிறு (திங்கள் இரவு) முஹ்யித்தீன் ஆண்டகை கந்தூரி பெருவிழா. சந்தனக்குடம் புறப்படும் முன் அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. இடையக்கோட்டை, திண்டுக்கல்.

பிறை 13 29.03.2010 இரவு அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் , கௌஸிய்யா ஸலவாத் & குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. முஹ்யித்தீன் ஆண்டகை தைக்கா. கேம்பலாபாத், திருநெல்வேலி.

பிறை 14 30.03.2010 செவ்வாய் இரவு முதல் மறுநாள் அதிகாலை வரை. அதிகாலை அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. முஹ்யித்தீன் பிரபு சன்னிதானம் பொட்டல்புதூர் புனித திருத்தலம்.

பிறை 15 31.03.2010 பொட்டல்புதூர் புனித திருத்தலம் முஹ்யித்தீன் எஜமான் சன்னிதான சிறப்பு வழிபாடு

பிறை 16 01.04.2010 வியாழன் (வெள்ளி இரவு) பொட்டல் புதூர் புனித திருத்தலம் முஹ்யித்தீன் ஆண்டகை சன்னிதானம். குதுபிய்யத் மகா வேள்வி.

பிறை 17 02.04.2010 வெள்ளி குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. அல்ஹாஜ் பஷீர் முஹ்யித்தீன், ஹாஜிமா ராபியா இல்லம் தென்காசி இடைகால் பாலமார்த்தாண்டபுரம்.

பிறை 19 04.04.2010 முஹ்யித்தீன் பிரபு சன்னிதானம் பொட்டல்புதூர்.

பிறை 20 05.04.2010 திங்கள் இரவு அல்குதுபு முஹ்யித்தீன் பஷீர் அப்பா தைக்கா ஷரீப், மேலப்பாளையம், திருநெல்வேலி.

பிறை 21 06.04.2010 செவ்வாய் காயல்பட்டிணம் குத்பிய்யா மன்ஜில்.

பிறை 22 07.04.2010 புதன் முஹ்யித்தீன் ஆண்டகை கந்தூரிப் பெருவிழா காதிரிய்யா தெரு, குலசேகரன்பட்டிணம், தூத்துக்குடி.

பிறை 23 08.04.2010 ஞாயிறு முற்பகல் முஹ்யித்தீன் ஆண்டகை கந்தூரி. அஸ்மாவுல் கௌஸுல் அஅலம் &கௌஸிய்யா ஸலவாத் ஓதும் நிகழ்ச்சி. கான்காஹே ஃபஹீமிய்யா கூடுவாஞ்சேரி.

பிறை 27 12.04.2010 திங்கள் மதுரை.

பிறை 28,29 13.04.2010 செவ்வாய் புதன் ராமநாதபுரம் பகுதிகள்.

பிறை 30 15.04.2010 வியாழன் (வெள்ளி இரவு) மஹான் இபுராஹீம் ஷா வலியுல்லாஹ் தர்கா ஷரீப் பள்ளிவாசல், ஏர்வாடி

பிறை 30 16.04.2010 இராமநாட் ஹாஜியாரப்பா பள்ளி ஜும்ஆ பயான்.

**ஜமாதுல் அவ்வல் மாதம் :**

பிறை 1 16.04.2010 வெள்ளி இரவு. குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. முஹ்யித்தீன் நேசர் அல்ஹாஜ் சையிது அப்துல் காதிர் இல்லம், இராமநாதபுரம்.

பிறை 3 18.04.2010 ஞாயிறு மாலை முஹ்யித்தீன் ஆண்டகை ஜும்ஆ பள்ளிவாசல் பாசிப்பட்டரைத் தெரு, இராமநாதபுரம்.

பிறை 4 19.04.2010 திங்கள் இரவு. குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. தஞ்சாவூர் கீழவாசல் தட்டான் தெரு, ஜனாப் நிஜாம் முஹ்யித்தீன் இல்லம்.

பிறை 5 20.04.2010 செவ்வாய் மாலை, தஞ்சாவூர் கீழவாசல் சிராஜுத்தீன் நகர், மதினா பள்ளிவாசல்.

பிறை 6 21.04.2010 புதன் மாலை, தஞ்சாவூர் கீழவாசல் சைய்யிது அலி பாஷா பள்ளிவாசல்.

பிறை 7 22.04.2010 வியாழன் (வெள்ளி இரவு) புனித நாகூர் ஷரீப்

பிறை 8 23.04.2010 வெள்ளி பகல் தஞ்சை வடக்குத்தெரு, கரீம் டிரஸ்ட் ஜும்ஆ பள்ளிவாசல். (ஜும்ஆ பயான்)வெள்ளி மாலை - தஞ்சை, கொண்டிராஜபாளையம் ஆஸார் தைக்கால்.

பிறை 9 24.04.2010 சனிக்கிழமை இரவு மஹான் சாஹெப் வலியுல்லாஹ் கந்தூரி விழா.

பிறை 10 25.04.2010 ஞாயிறு (திங்கள் இரவு) குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. தஞ்சை அய்யம் பேட்டை பசுபதிகோயில் முஹ்யித்தீன் ஆண்டகை புனித வருகைத் திருத்தலம்.

பிறை 11 26.04.2010 திங்கள் இரவு. குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. சிதம்பரம் முபாரக் மன்ஜில்.

பிறை 12 27.04.2010 குதுபு முஹ்யித்தீன் பள்ளிவாசல் பரங்கிப்பேட்டை இரவு. குத்பிய்யா ஷரீப் ஓதும் சிறப்பு நிகழ்ச்சி. மௌலானா மௌலவி ஹாபிஸ் அல்ஹாஜ் காஜா முயீனுத்தீன் கலீபா ரஃபியுல்லாஹ் ஷா காதிரி இல்லம்.

பிறை 12 28.04.2010 புதன், பரங்கிப்பேட்டை

மே மாதம் 09.05.2010 பெங்களூர்.

10,11,12 திங்கள் முதல் புதன் வரை ஈரோடு தர்காக்கள்.

13,14 குத்பிய்யா ஷரீப் நிகழ்ச்சி. மௌலவி முஹம்மத் தாஹா யாஸீன் சிராஜி, முஹயித்தீன் இல்லம், கொளிஞ்சாம்பாறை,பாலக்காடு-கேரளா.

## புதையல்...6 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமாஅத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி.

## முஸ்லிம் சகோதரர்களுக்கோர் முக்கிய அறிவிப்பு...! 1974 - தூத்துக்குடி சம்பவம்...

*15-6-74*ல் தூத்துக்குடி ஜாமிஆ மஸ்ஜிதில் நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா ஜமா அத்துல் உலமா சபையின் தீர்மானங்கள் விஷமிகள் ஜாக்கிரதை என்ற தலைப்பில் வெளியானவற்றில் 4ம் தீர்மானம் கண்டு பொதுமக்களிடம் குழப்ப நிலை ஏற்பட்டதினால் எதார்த்தமாக நடந்த சம்பவத்தை விளக்கிவைக்குமாறு கேட்டு எங்களுக்கு பல ஊர்களிலிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பதில் எழுதுவது சிரமமானதினால் இந்த பிரசுரத்தின் மூலம் உண்மையை விளக்கி வைக்கிறோம்.

சில நாட்களுக்கு முன் சூபி ஹஜ்ரத் அவர்கள் தங்கள் குழந்தையின் சுகக் குறைவுக்கு பரிகாரம் பார்ப்பதற்காக இங்குள்ள ஆஸ்பத்திரியில் குடும்பத்தோடு சில காலம் தங்கியிருந்தார்கள்.

அதுசமயம் பள்ளிவாசலுக்கு அடிக்கடி வருவார்கள். பள்ளி வாசலிலேயே தொழுவார்கள். ஜமாஅத் நடந்தால் இங்குள்ள பேஷ் இமாமுடன் பின் தொடர்ந்து தொழாமல் ஜமாஅத் முடிந்ததும் தனியாகவே தொழுவார்கள். தனியாக ஜமாஅத் நடத்தியதில்லை.

பள்ளிவாசல் பேஷ் இமாமுடன் தொழுதால் தொழுகை கூடாதென்று எவரிடமும் சொல்லவுமில்லை. தப்லீக் தலைவர்களையோ, மற்றவர் எவரையுமோ மறைமுகமாகவுங்கூட காபிர்கள் என்று சொல்லியதுமில்லை.

அவர்களிடம் நெருங்கிப் பழகியவர்களில் ஒருவர் நீங்கள் முன்பு தூத்துக்குடிக்கு வரும்போதெல்லாம் இந்த பேஷ்இமாமோடு தொழுதுதானே வந்தீர்கள்! இப்போது ஏன் அவருக்குப் பின்னால் தொழுகிறீர்களில்லை என்று வினவியபோது,

நான், இந்த தப்லீக்ஜமா அத்தானது மக்களை வஹ்ஹாபிகளாக ஆக்குவதற்காகவே வஹ்ஹாபி களாலேயே உண்டாக்கப்பட்டது என்று தக்க ஆதாரங்கள் காட்டி மக்கள் இதில் சேரக் கூடாது என்று பல புத்தகங்களும் நோட்டீஸ்களும் எழுதி பல்லாயிரக் கணக்கான பிரதிகள் அச்சிட்டு இலவசமாக வினியோகித்து பல்லாண்டு காலமாகவே பிரச்சாரம் செய்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்பதை அறிவீர்கள்.

தப்லீக் ஜமாஅத்தின் கெட்ட நோக்கத்தை விளங்கிய பிறகும் அதில் பிடிவாதமாக இருக்கிறவர்களுக்குப் பின்னால் நான் தொழமாட்டேன். இந்த பேஷ்இமாம் அவர்கள் விஷயத்தை விளங்கிக் கொள்ளாமல்தான் தப்லீகில் சேர்ந்திருக்கக்கூடுமென்று நல்லெண்ணம் வைத்துதான் முன்பெல்லாம் அவருடன் தொழுதுவந்தேன். இப்போது அவரின் போக்கைப் பார்த்தபின் அவர்பேரில் நல்லெண்ணம் வைக்க முடியவில்லை. அதனாலேயேதான் தனியாக தொழுகிறேன் என்று சொன்னார்களாம்.

சூபி ஹஜ்ரத் அவர்கள் இந்த ஊரை விட்டும் போனபின் நெல்லை ஜமாஅத்துல் உலமாகக்காரர்கள் இங்குவந்து, அவர்களும் தப்லீக் காரர்களும் சேர்ந்துதான் இவ்விதமாக இட்டுக்கட்டி விஷமப் பிரச்சாரம் செய்து மக்களை குழப்பத்திலாக்கி யிருக்கிறார்கள்.

### தீய தப்லீகை எதிர்த்த மார்க்க மேதைகள்:

1. சூபி ஹஜ்ரத் அவர்களைப் போலவே மதராஸ் கவர்மெண்ட் காஜி முஹம்மத் ஹபீபுல்லாஹ் ஹஜ்ரத் அவர்களும், வேலூர் பாகியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வர் ஷைகு ஆதம் ஹஜ்ரத் அவர்களும்

2. காயல்பட்டணம் மஹ்ழரத்துல் காதிரிய்யா அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வர் முஹம்மது அபூபக்கர் கிப்லா ஹஜ்ரத் அவர்களும்,

3. மீரட் மௌலானா அப்துல் அலீம் சித்தீகி ஹஜ்ரத் அவர்கள் பர்றத் மின்கஸ்வறா என்ற மார்க்கத் தீர்ப்பு நூலிலும்,

4. பத்ஹுத்தையான், மஆனி ஆகிய கிரந்தங்களின் ஆசிரியரான கீழக்கரையைச் சேர்ந்த சங்கைக்குரிய பெரியார் அல் ஆலிமுல் அரூஸ் அல்லாமா செய்யிது முஹம்மது மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மஆனியில் 177,178 பக்கங்களில் இஸ்மாயீல் தெஹ்லவி(இல்யாஸின் குருவான ரஷீது அஹ்மது கங்கோஹியின் குரு) தான் விரும்பியவாறு குர்ஆனுக்குத் தப்பான அர்த்தம் செய்பவன் என்றும் மடையன் என்றும் வஹ்ஹாபி என்றும் முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பின்பற்றியவன் என்றும் எழுதியுள்ளார்கள்.

5. மதீனாவிலுள்ள சங்கைக்குரிய 34 உலமாக்கள் ஹுஸாமுல் ஹரமைன் என்னும் மார்க்கத் தீர்ப்பில் குலாம் அஹமது காதியானி, ரஷீது அஹமது கங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலிதானவி ஆகியோர்கள் காபிர்கள் என்றும், இதை சொல்ல தயங்கியவனும் சந்தேகித்தவனும் காபிர் என்றும் தீர்ப்பளித்துள்ளார்கள்.

6. இந்தியாவின் பல பாகங்களிலுள்ள மேன்மை தங்கிய 268 உலமாக்கள், அஸ்ஸவாரிமுல் ஹிந்தியா என்னும் மார்க்கத் தீர்ப்பில் மேற்கூறப்பட்டவர்கள் காபிர் என்றும் முர்ததுகள் என்றும் தீர்ப்பளித்துள்ளார்கள்.

7. இந்தியாவிலுள்ள சங்கைக்குரிய 45 உலமாக்கள் அல் அதாபுல் பஃஸ் அலா ரஅஸி இல்யாஸ் என்னும் மார்க்கத் தீர்ப்பில் இல்யாஸ் காபிர் என்று தீர்ப்பளித்துள்ளார்கள்.

8. கேரள சமஸ்தான ஜமியத்துல் உலமா சபையும் இன்னும் பல உலமாக்களும் தப்லீக் ஜமாஅத்தைப் பற்றி மறுப்பு பத்வாக்கள் எழுதியிருக்கிறார்கள்.

சூபி ஹஜ்ரத் அவர்கள் தப்லீக் ஜமாஅத்தைப் பற்றி முக்கியமான இரண்டு குற்றச் சாட்டுகளை எடுத்துக் கூறி அதற்கு தக்க ஆதாரங்களையும் காட்டி மறுக்கிறார்கள்.

### முதலாவது குற்றச்சாட்டு :

வஹ்ஹாபி கொள்கையின் ஸ்தாபகர் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியின் கிதாபுத் தௌஹீது என்ற அரபி நூலுக்கு சரியான உருது மொழிப் பெயர்ப்பைப் போன்றதும் வஹ்ஹாபிக் கொள்கைகள் பூராவுமே எழுதப்பட்ட துமான இஸ்மாயீல் தெஹ்லவியினால் எழுதப்பட்ட தக்வியத்துல் ஈமான் என்ற நூலை ரஷீத் அஹ்மத் கங்கோஹி தனது பதாவா ரஷீதிய்யாவின் 42ஆம் பக்கத்தில் தக்விய்யத்துல் ஈமான் எனும் நூல் மிகவும் நல்ல நூல், ஷிர்கு- பித்அத்தை தவிர்ப்பதற்கு நிகரில்லாதது. அதில் ஆதாரங்களெல்லாம் பூர்ணமாக அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும், ஹதீதுகளிலிருந்துமே காட்டப் பட்டிருக்கிறது. அந்நூலை வைத்திருப்ப தும், அதைப் படிப்பதும் இன்னும் அதன்படி அமல் செய்வதும் (ஐனுல் இஸ்லாம்) இஸ்லாம் தானாகும். நன்மையும் கிடைக்கும். என்று சொல்லி வஹ்ஹாபிக் கொள்கை அத்துனையையும் ஒப்புக் கொண்டு விட்டார்.

மேலும் அவரின் பதாவாயே ரஷீதிய்யா எனும் நூல் 235-ம் பக்கத்தில் வஹ்ஹாபி கொள்கையின் ஸ்தாபகர் முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபை நல்லவர் அவரின் கொள்கை நல்லது என்றும் சொல்வதோடு அவரைப் பின்பற்றியவர்களுக்கு வஹ்ஹாபிகள்

என்று சொல்லப்படும் என்றும் சொல்லி அந்த கொள்கைகளை நல்லதென்று சரிகண்டதினால் தானே தன்னையும், வஹ்ஹாபி என்று ஒப்புக்கொள்கிறார்.

மேலும் அவரின் தஜ்கிரதுர் ரஷீத் இரண்டாம் பாகம் 17ஆம் பக்கத்தில் இந்த காலத்தில் நேர்வழியும் ஈடேற்றமும் என்னைப் பின்பற்றுவதிலேயே தரப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார்.

தப்லீக் இயக்கத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் ஜீவிய சரித்திரமான தீனிதாவத் என்னும் நூல் 44ம் பக்கத்தில் மௌலவி இல்யாஸ் அந்த (வஹ்ஹாபி) ரஷீத் அஹ்மத் கங்கோஹி இடத்தில் தான் பத்து வருடகாலம் கல்வி கற்று அவரிடத்திலேயே பைஅத்தாகி முரீதாக ஆனதோடு அவர்களை காணாமல் எனக்கு நிம்மதியேயில்லை. தூக்கத்திலிருந்தும் விழித்து அவருடைய முகத்தைப் பார்க்க வேண்டி அவரிடம் சென்று தரிசித்து, திரும்பவும் வந்து தூங்குவேன் என்று சொல்வார் என்றும்,

மவ்லவி இல்யாஸின் மல்பூஜாத்து வாய்மொழிகள் என்னும் நூல் 114ம் பக்கத்தில் ரஷீத் அஹ்மத் கங்கோஹி இக்காலத்தில் நேர்வழி காட்டும் குத்பாகவும் முஜத்திதாகவும் இருக்கிறார் என்றும் சொல்கிறார்.

ஆகையினால் மௌலவி இல்யாஸும் வஹ்ஹாபியே ஆவார்.

### இரண்டாவது குற்றச்சாட்டு:

தப்லீகின் ஸ்தாபகர் மவ்லவி இல்யாஸினாலேயே எழுதப்பட்ட மகாதீபு மவ்லவி இல்யாஸின் லிகிதங்கள் என்னும் நூலின் 122ஆம் பக்கத்தில் அவர் தப்லீகின் காரிய குழுவைப் பற்றி எழுதிய கடிதத்தில் இரண்டு கருமங்கள் இருக்கின்றன. ஒன்று நடவாமலிருப்பது அவசியமானது. அதை(இவர்கள்) செய்கிறார்கள். மற்றொன்று நடப்பது அவசியமானது. அதை(இவர்கள்) செய்கிறார்கள் இல்லை. முந்திய கருமம் கலிமா தொழுகையைச் சரியாகச் சொல்லவும், செய்யவும் வைப்பது. (இதை இவர்கள்) செய்கிறதென்றாலுங் கூட (இது) இந்த இயக்கத்தின் அசல் நோக்கத்தைப் போன்றது என்ற தோரணையில் செய்கிறார்கள். எதார்த்தமோ, இது (இந்த இயக்கத்தின்) நோக்கமில்லை என்றும், இன்னும் அதே நூல் அதே பக்கத்தில் கலிமாவையும் தொழுகையையும் சரியாகச் சொல்லவும், செய்யவும் வைப்பது இந்த இயக்கத்தின் கருத்தல்ல என்றும், இன்னும் தீனி தஅவத் என்னும் நூல் 205ஆம் பக்கத்தில் ஒரு சமயம் தனது அன்பர் மவ்ளவி ளஹீருள் ஹஸன் சாகிபு எம்.ஏ., அலிகார். (இவர் ஒரு விசால ஆராய்ச்சியாளரான அறிஞர்) இவரிடம் இல்யாஸ் சொல்கிறார்:-

ளஹீருள் ஹஸன்! என்னுடைய கருத்தை ஒருவரும் விளங்கிக் கொள்கிறார்களில்லை. ஜனங்கள் நினைத்துக் கொள்கிறார்கள் இது தொழுகையைப் பற்றி (ஏவக்கூடிய) இயக்கமென்று. நான் சத்தியமாகச் சொல்கிறேன். இது ஒரு போதும் தொழுகையைப் பற்றி ஏவக்கூடிய இயக்கமில்லை! என்றும் சொல்லிவிட்டு அதே நூல் அதே பக்கத்தில் ஒரு நாள் (இல்யாஸ்) பெருங் கைசேதத்தோடும், கவலையோடும் சொன்னார். ளஹீருள் ஹஸன்! (எனது நோக்கம் ஒரு புதிய கூட்டத்தை உண்டாக்குவதாகும்! என்றும் சொல்கிறார்.

எனவே தப்லீக் இயக்கத்தின் நோக்கம் நம் ஸுன்னத்துவல் ஜமாஅத் மக்களை புதிய சமுதாயமாக அதாவது தனது கூட்டமாகிய வஹ்ஹாபிக் கூட்டமாக ஆக்குவதுதான் என்று தப்லீகின் ஸ்தாபகர் அவர் தனது வாயினாலேயே சொல்கிறார்.

### ஜமாஅத்துல் உலமா சபையினர்களே!

சூபி ஹஜ்ரத் அவர்கள் மக்களை வழிகேட்டைவிட்டும் காப்பாற்று வதற்காக தப்லீகின் கெடுதல்களைப் பற்றி தக்க ஆதாரங்களை காட்டி மக்களிடம் பிரச்சாரம் செய்வது விஷமப் பிரச்சாரமா? அல்லது சூபி ஹஜ்ரத்தைப் பற்றியும், அவர்கள் செய்யும் வேலையைப் பற்றியும் நேரில் கண்டு தெரிந்து கொள்ளாமல், அவர்களைப் பற்றி எவரோ ஒருவர் குறை கூறி எழுத்து மூலமாக அறிவித்ததாக வைத்துக் கொண்டு உலமாசபை அவர்களை கண்டிப்பதாக தீர்மானம் செய்து கொண்டு பிரச்சாரம் செய்வது விஷமப் பிரச்சாரமா?

ஒருவரைப் பற்றி அவர் குற்றம் செய்தாரா? என்று அவரை நேரில் விசாரித்து அறியாமல், அவர் குற்றம் செய்ததாக எவரோ ஒருவர் எழுத்து மூலம் கொடுத்ததை வைத்துக் கொண்டு அவர்பேரில் குற்றம் சாட்டுவதும், அவரைக் கண்டிப்பதும், உலமாக்களின் அறிஞர்களின் பிரச்சாரமா? அல்லது அறிவிலிகளின் விஷமப் பிரச்சாரமா?

தப்லீக் ஜமாஅத்தின் நோக்கம் மக்களை புதிதான கூட்டமான வஹ்ஹாபியக் கூட்டம் ஆக்குவது தான் என்று தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகரே அவரின் வாயினால் சொல்லியிருக்கும் போது தப்லீக் ஜமாஅத் புனிதமானது அது நல்லசேவை செய்கிறது அதைப்பற்றி எதிர்பிரச்சாரம் செய்யக் கூடாது என்று தீர்மானித்திருக்கின்ற இந்த உலமாசபை சுன்னத் வல் ஜமாஅத் உலமா சபையா? அல்லது வஹ்ஹாபிய உலமா சபையா?

தப்லீக் ஜமாஅத்தைப் பற்றி மார்க்க அடிப்படையின்படி ஆதாரங்கள் காட்டி அது கெட்டது என்று சொல்லும்போது, அந்த ஆதாரங்களில் ஒன்றையுமே மறுக்காமல், அது நல்லது என்பதற்கு ஆதாரங்கள் காட்டாமலும் தப்லீக் புனிதமானது என்று உலமாக்கள் எல்லாம் ஏகோபித்து தீர்மானித்து இருப்பதாக சொல்வது மார்க்கத்தின் பேரில் துணிச்சலாக போர்புரிவதாகும் அல்லவா?

குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் ஆகிய மார்க்க அடிப்படையின் படி கெட்டதென்று ஆனதை தென்னக உலமா சபை என்ன? அகில உலமா சபையாரு மென்ன? அகில உலக உலமாக்களும் கூட அதை புனிதமானது என்று சொல்ல முடியுமா? ஒரு கருமத்தை நல்லது என்றோ, கெட்டது என்றோ நிர்ணயிப்பது மார்க்கமே தான். மார்க்கம் அல்லாஹ்வினால் அனுப்பப் பட்டதுவே தான். ஜனங்களால் ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது அல்ல.

### உலமா பெருமக்களே!

தப்லீக் ஜமாஅத் கெட்டது என்பதற்கு எடுத்துக் காட்டப்பட்ட ஆதாரங்களை எல்லாம் மறுத்து அது புனிதமானது என்பதற்கு ஆதாரம் காட்டுங்கள் ஆதாரங்கள் காட்டாமலும் வெறுமனே உலமாசபையினர்கள் எல்லோருக்கும் அது புனிதமானது என்று தீர்மானித்ததாக விஷமப் பிரச்சாரம் செய்யாதீர்கள். உங்கள் உதவாக்கரை தீர்மானத்தைப் பார்த்து மக்கள் ஏமாறமாட்டார்கள்.

மக்களுக்கு உங்கள் பெயரில் வெறுப்புதான் நிச்சயம் உண்டாகும்.

வஸ்ஸலாமு அலா மனித்தபஅல் ஹுதா.

**இவண்,**
**மஜ்லிஸ் முஹிப்புர் ரஸூல் சபை,**
**தூத்துக்குடி.**
***25-07-1974***

---

**9 ஆம் பக்க தொடர்ச்சி**

ஃபீ ஜாத்தி மின் ஆகிரில் லைலி என்ற பாடத்தில் பதிவாகி உள்ளது.

இந்த ஹதீஸை ஆதாரமாகக் கொண்டுதான் அஹ்லெ சுன்னத் வல் ஜமாஅத் ஷைகுமார்கள், மஷாயிகீன்கள் அதிகாலை வேளையில் தத்தமது சில்சிலாவின் ஞானவான்களின் தரீகா வழி திருநாமப் பட்டியலான ஷஜ்ரா ஷரீபை ஓதி துஆ செய்யும்படி பைஅத் பெற்று முரீது ஆகுவோருக்கும் அறிவுறுத்துகிறார்கள்.

இறைநேசச் செல்வர்களான அவுலியாக்களின் உரூஸ் கந்தூரி நிகழ்ச்சிகளில் அதிகாலை பாங்கிற்கு முன் சந்தனம் பூசும் புனிதம் நிறைவேற்றி அந்தந்த வலிமார்களின் வஸீலாவாக்கி துஆ கேட்பது வாழையடி வாழையாய் ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டு இந்த ஹதீஸே குத்ஸியைக் கொண்டே நடந்து வருகிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் இப்புனித ஹதீதே குத்ஸியாக்களின் பரக்கத்தால் இறை நேசர்களான வல்ல வலிமார்களின் மெய்ஞான மேன்மைகளை புரிந்து கொண்ட பாக்கியத்தை நமக்கு வழங்கிட பணிந்து வேண்டுவோமாக.

ஆமீன்! பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்!! வ அவ்லியாயே காமிலீன்!!!

**மேலும் மொழிவோம்.....**



சிஹாசித்தா

# أحاديث النبي صلى الله عليه وآله وسلم

# மாநபியின் மணிமொழிகள்



## ஹதீஸே குத்ஸி ஓர் சிறு குறிப்பு :-

சென்ற இதழில் ஹதீஸ்களின் வகைகளான 1. ஹதீஸே குத்ஸி 2.ஹதீஸே சஹீ 3. ஹதீஸே மர்ஃபூஉ 4. ஹதீஸே மவ்கூஃப் 5. ஹதீஸே மஃக்தூஉ 6. ஹதீஸே முதவாதிர் 7. ஹதீஸே மஷ்ஹூர் 8. ஹதீஸே அஜீஸ் 9. ஹதீஸே கரீப் 10. ஹதீஸே மவ்ஜூஉ 11.வஜ்ஜாவுல் ஹதீஸ் 12. ஹதீஸே ளயீஃப் என்பதைக் குறித்து அவைகளைப் பற்றி ஹதீது கலை வல்லுனர்கள் கூறும் சுருக்கமான விளக்கங்களை குறித்தோம். அதில் முதல் வகை ஹதீதாக ஏகோபித்த கருத்தாக எற்றுக்கொள்ளப்பட்ட ஹதீஸே குத்ஸியைப் பற்றி உதாரணங்களுடன் சற்று விரிவாய்ப் பார்போம்.

ஹதீஸே குத்ஸியைப் பற்றி ஹதீஸ் கலை வல்லுனர்கள் பற்பல விஷயங்களை தந்துள்ளார்கள். இந்த ஹதீஸ்களைப் படிப்பதன் மூலம் படிப்பவரின் இதயத்தில் இனிமையான இறையச்சம் பீரிடுவதை உணரலாம். இதனால் அல்லாஹ்வின் குத்ரத் மீதான நேசமும் கூடுதலாகிறது.

## ஹதீஸ்கலை வல்லுனர்களின் கூற்றுகள்:-

ஹதீஸ்கலை வல்லுனர்களில் புகழ்பெற்ற அல்லாமா சையத் ஷரீஃபுல் ஜர்ஜானி ஹதீஸ் குத்ஸியின் விளக்கத்தை குறிக்கும் பொழுது, கருத்தை பொறுத்த மட்டில் அது அல்லாஹ்வின் புறத்துடையதாகவும் வார்த்தைகள் அனைத்தும் கண்மணி நாயகம் அவர்களின் அமுத மொழிகளாக இருக்கும். மேலும் இதன் ஆதாரம் முழுக்க முழுக்க அல்லாஹ் தன் ரஸூலுக்கு நேரடியாக கூறுவதாகவும் இருக்கும் எனக் கூறுகிறார்.

அல்லாமா முல்லா அலி காரி அவர்கள் ஹதீஸே குத்ஸிக்கு கொடுக்கும் விளக்கங்களில் வார்த்தை வித்தியாசங்களைத் தவிர கருத்து வித்தியாசங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஹதீஸே குத்ஸியை ஹதீஸே இலாஹிய்யா என்றும் ஹதீஸே ரப்பானியா என்றும் கூறும் அறிஞர் பெருமக்கள் உண்டு.

## மற்ற ஹதீஸ்களுக்கும் ஹதீஸே குத்ஸிக்குமுள்ள வித்தியாசம்:-

ஹதீஸே குத்ஸிக்கும் ஏனைய ஹதீஸ்களுக்குமுள்ள முக்கிய வித்தியாசம் யாதெனில் மற்ற ஹதீஸ்கள் அனைத்தும் நபிகள் கோமான் பெருமான் கண்மணி நாயகம் கூறியதாக ஸஹாபாக்கள் அறிவிப்பவை ஆகும். ஆனால் ஹதீஸே குத்ஸி என்பது அல்லாஹ் தமக்கு அறிவித்ததை அவனது ஹபீபும், மஹ்பூபுமாகிய ரஸூலுல்லாஹ் அவர்கள் அறிவித்ததாக சஹாபாக்கள் கூறுவதாகும்.

ஹதீஸே குத்ஸியின் அறிவிப்பு எல்லாம் வல்ல அல்லாஹ்வைச் சென்றடையும்.

ஏனைய ஹதீஸ்களின் அறிவிப்பு அவனது ஹபீபும், மஹ்பூபுமாகிய ரஸூலுல்லாவைச் சென்றடையும்.

இந்த ஹதீஸே குத்ஸியின் சில உதாரணங்களைப் பார்போம்....

## திங்கள், வியாழன் திறந்திருக்கும் சொர்க்கம்:-

### ஹதீஸ் எண்:1

ஹஜ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் அறிவிக்கிறார்கள் கண்மணி நாயகம் அல்லாஹ் அறிவித்ததாக கூறுகிறார்கள்... நான் சொர்க்க வாயில்களை திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளில் என்னைத் தவிர வேறு ஒருவனையும் வணங்காதவனுக்கும், உங்களில் ஒருவர் மீது மற்றவர் வஞ்சக சூழ்ச்சி செய்யும் இருவருக்கும் வாய்ப்பளித்து அவர்கள் திருந்திவிடு வார்களேயானால் மன்னித்து அந்த வாயில்கள் வழியாக சொர்க்கத்தில் சேர்ப்பேன். இது போன்று மும்முறை கட்டியம் கூறினார்கள்.

இந்த ஹதீஸின்படித்தான் திங்கள் மற்றும் வியாழக் கிழமைகள் எவ்வளவு புனித நாட்கள் என்பதும் அந்த நாட்களில் ஜியாரத்துக்கு சென்று துஆ கேட்பது ஆதாரப்பூர்வமானது என்பதும், அதை நமது முன்னோர்கள் தொடர்ந்து செய்து வந்த நல்அமலான செய்முறை என்பதும் விளங்கும்.

## இறைநேசர்களின் இருதயங்கள்:-

### ஹதீஸ் எண்:2

நபிகள் நாயகம் அவர்கள் அல்லாஹ் கூறுவதாக அறிவிக்கிறார்கள். என்னுடைய பூமியும் என்னுடைய வானமும் என்னை (அளவு) கொள்ள முடியாது. ஆனால் ஒரு முஃமினின் (கல்பில்) இருதயத்தில் நான் (முழுமை) கொண்டு விடுகின்றேன்.

மேற்கண்ட ஹதீஸ் ஷைக் முஹ்யித்தீன் இப்னு அக்பர் தமது ஃபுதூஹாத்துல் மக்கியா கிரந்தத்திலும், சுஹ்ரவர்தியா தரீகாவின் மூலர் ஹஜ்ரத் ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி தன்னுடைய அவாரிஃபுல் மஆரிஃப் கிரந்தத்திலும், கல்விக் கடல் இமாம் கஸ்ஸாலி தன்னுடைய இஹ்யா உலூமுத்தீன் கிரந்தத்திலும் பதித்துள்ளார்கள்.

இந்த ஹதீதின் மற்றொரு தழுவலான நபிமொழி கூற்றையும் வலிமார்கள் கூறுவதுண்டு. கல்புல் முஃமினீன அர்ஷுல்லாஹ், அதாவது முஃமின்களின் இருதயம் அல்லாஹ்வின் அர்ஷ் ஸ்தலமாக இருக்கிறது. இதைக் கொண்டுதான் அல்லாமா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் தமது மஸ்னவி ஷரீஃபில் அல்லாஹ்வின் நேசர்களின் கூற்று அல்லாஹ்வின் கூற்றாகவேயிருக்கும் என்றார்கள் போலும்.

## ரகஸியங்கள் அறியப்பெற்ற இறைநேசர்கள்:-

### ஹதீஸ் எண்: 3

ஹஜ்ரத் குஜைபத்துல் யமானி அவர்கள் அறிவிக்கிறார்கள் பாத்தின் என்றும் ஆன்மீக அந்தரங்க ஞானதரீகாவின் கல்வி பற்றி வினவப்பட்ட போது நபிகளார், ஜிப்ரயீல் அவர்கள் என்னிடம் அல்லாஹ் அறிவித்ததை தெரிவித்தார்கள் இந்த மெய்ஞான அந்தரங்க கல்வி சிர் என்ற ஓர் ரகசியமாகும். என்னுடைய நேசர்களை வலிமார்களுக்கு மத்தியில் அவர்களது கல்பான இருதயங்களில் நான் அதை வைத்துள்ளேன் என்று நவின்றார்கள்.

இந்த ஹதீஸே குத்ஸியைக் கொண்டு நமக்கு தெரியவருவது என்னவென்றால் 1. இல்மே லதுன்னி என்ற இறை சார்ந்த ஞானம், தன்னை நேசிப்போருக்கு அல்லாஹ் வழங்குகிறான். 2. அந்த சிர்- ரகசியங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது நேசனான அடியானுக்கும் இடையில் ஏற்படும் தொடர்புகளாகும்.

## அதிகாலையில் ஷிஜ்ரா படிப்பதும், உருஸ் சந்தனம் பூசுவதும் ஏன்?

### ஹதீஸ் எண்: 4

ஹஜ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் கூறுகிறார்கள் எம்பெருமான் நபிகள் கோமான் அறிவித்தார்கள் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒவ்வொரு இரவின் மூன்றாவது பகுதியில் இவ்வுலக விதானத்திற்கு வந்து கூவி அழைத்து அறிவிப்பு செய்கிறான். யார் என்னிடம் இவ்வேளையில் துஆ-பிரார்த்தனை செய்கிறார்களோ அதை நான் ஏற்றுக் கொள்கிறேன், எதையும் வேண்டுவார் களேயானால் அதை நான் அவர்களுக்கு அளிப்பேன், யார் என்னிடம் பாவமன்னிப்பு கேட்கிறார்களோ அவர்களுக்கு நான் மக்ஃபிரத் என்னும் பாவமன்னிப்பு வழங்குகிறேன்.

இந்த ஹதீஸ் புகாரி ஷரீஃபின் கிதாபுல் ஜூம்ஆ, பாபுத் துஆ...

தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க




**முஸ்லிம்கள் தீவிரவாதிகள் அல்ல... அமெரிக்க பல்கலைக்கழகம் சுன்னத் ஜமாஅத் சூபியிசத்திற்கு நற்சான்று. புள்ளிவிவர ஆய்வறிக்கை...**
**ஹெட்லி எங்கள் ஏஜெண்ட் ––– அல்ல. CIA அறிவிப்பு...** (எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை.)
**இந்திய – பாக் போருக்கு கொம்பு சீவும் அமெரிக்கா...**(இரத்தம் குடிக்கத் துடிக்கும் வெள்ளை நரி)
**முஹர்ரம் பண்டிகை மத நல்லிணக்கத்திற்கும், தர்கா இதழ் அங்கிகாரத்திற்கும்... ஒட்டகனார் வாழ்த்துச் செய்தி...**

*தனது டெஸ்கில் பல நூட்களையும், சில பத்திரிக்கை செய்திகளையும் பரப்பி வைத்து ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்த ஒட்டகனாரை நம் சலாமின் சப்தம் மீட்டு வந்தது.*

*வ அலைக்கும் அஸ்ஸலாம்! பதில் சலாம் கூறி முகம் மலர வரவேற்றவர், ஆசிரியரும் நம் முன் தரையில் அமர்ந்ததைப் பார்த்து இது ஏழைகளின் ஆபீஸ், டைல்ஸ்தரை, ஃபால்ஸ் ஸீலிங் ரூம், பெரிய கண்ணாடி மேஜை, சுழலும் நாற்காலி என்ற பந்தாவெல்லாம் இருக்காது ஆசிரியர் வேணும்னா என்ட்ட இருக்கிற பிளாஸ்டிக் நாற்காளியில் அமரட்டும்.... என்றார்.*

*என்ன கிண்டலா? இன்று உலகம் எங்கே போய்கிட்டு இருக்கு தெரியுமா? கம்யூட்டர் தாண்டி ஈ-மெயில், இன்டர்நெட்ன்னு வளர்ந்துட்டு இருக்கு. ஆபிஸ்ஸுன்னா அதெல்லாம் இருந்தா தான் நாலு பேர் பார்த்தா மதிப்பாங்க. RNI, Postel அஃபீஷியல் அங்கிகாரத்திற்கு அதெல்லாம் தேவை! எனக்கா அந்த வசதியெல்லாம் கேக்கரேன்? தர்க்கம் பண்ணத் தொடங்கினார் ஆசிரியர்.*

*யா ரஸுலே! யா முஹ்யித்தீனே!!.... சரி உங்க ரெண்டு பேர் பஞ்சாயத்தையும் பின் பேசி தீர்த்துக்கலாம் செய்தியைச் சொல்லும்! என்று குறுக்கு சால் ஓட்டினோம்.*

எனக்கு ரெம்ப நாளா சந்தேகம். முஸ்லிம்களின் பேரில் உலகம் முழுக்க கெட்ட பெயர், எங்கும் தீவிரவாத முத்திரை, இது போதாது என்று வஹ்ஹாபிஸம், தேவ்பந்தி தப்லீகி, தவ்ஹீதி என்று பற்பல பெயர்களில் அரசியல், ஆன்மீகம் என்று எங்கும் கோரத் தாண்டவமாடுகிறதே. யா ரஸுலல்லாஹ்! நம் சுன்னத் வல் ஜமாஅத் மக்கள் உண்மையிலேயே குறைந்து விட்டார்களா? அவுலியாக்களை நேசிப்போருக்கு ஏன் இந்த வேதனை? என்று நான் சொல்லிக்கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தேன்.

இந்த மாத ஜாமே நூர் உருது பத்திரிக்கையில் நல்லதோர் செய்தி வந்துள்ளது அதை எடுத்து நம் முன் போட்டார்....

நாம் என்ன உருதுவில் M.A.வா விஷயம் சென்னாத்தானே எழுதறத்துக்கு! என்று முறைத்தோம்.

புரிந்து கொண்டு புன்னகைத்தவர் தொடர்ந்தார். முஸ்லிம்களுக்கு அமெரிக்கர்களின் பேரில் ஏன் இந்த ஆத்திரம்? எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகளா? அனைத்து முஸ்லிம்களும் ஆபத்தானவர்களா? என்ற சிந்தனை அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள Georgetown பல்கலை கழகத்திற்கு இந்த சந்தேகம் வந்துள்ளது. அதற்கான ஆய்வை மேற்கொண்டார்கள். *500* உலகப் புகழ்வாய்ந்த முஸ்லிம்களை தேர்ந்தெடுத்து அவர்களை மக்கள் ஏன் விரும்புகிறார்கள்? என்ன என்ன காரணங்கள்? ஆதரவு? எதிர்ப்பு? என கேள்வி மேல் கேள்வி கேட்டு உலக அளவில் சர்வே மேற்கொண்டதில் வந்த முடிவுகளின் படி

*1. 90%* மேற்பட்ட முஸ்லிம்கள் அமைதியை விரும்புகிறார்கள்.

*2.* அமைதியை விரும்பும் அத்தனை முஸ்லிம்களும் சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கையைக் கொண்டவர்கள்.

*3.* இவர்கள் இந்தியாவில் சூஃபியாக்கள் எனப்படும் தர்காவைச் சார்ந்த பரேல்வி சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் தான் தர்கா வலிமார்களை நேசிப்பவர்களாக இருக்கிறார்கள். போன்றவை அந்த ஆய்வறிக்கையின் சாரமாகும்.

அந்த ஆய்வில் சவூதி மன்னர் அப்துல்லாஹ், பின் லாதின், முல்லா உமர், அமீனே மில்லத்,A.P.J.அப்துல் கலாம், A.R.ரஹ்மான், ஷாருக்கான் போன்ற உலகப் புகழ்வாய்ந்தவர்களும் உண்டு.

*பின் எப்படி பின்லேடினும் முல்லா உமரும் நல்லவர்களுக்கு நடுவில் பேமஸ் ஆனார்கள் என்று நம் சந்தேகத்தை கிளறினோம்.*

வஹ்ஹாபியத் என்றாலே தீவிரவாதம் தான். பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் காபிர்களா வாழ்கிறார்கள்? அங்கே போய் அப்பாவி மக்கள் மீதும், பள்ளிவாசல்கள் மீதும், தர்காக்கள் மீதும் குண்டு போட்டு அழிப்பது தான் இஸ்லாமா? ஜிஹாதா?

*ஒரு பழமொழி தெரியுமா உமக்கு?... தெரியலைன்னு தானே கேட்க வந்திருக்கிறோம்! என்றோம்.*

விளம்பரம் விரும்பி ஒருத்தன் ஜம்ஜம் கிணற்றில் சிறுநீர் பெய்தானாம்! அப்படித்தான் வஹ்ஹாபிகள் செய்கிறார்கள்!

அதைப் போல் உலகம் முழுக்க உள்ள வஹ்ஹாபிகள் எதையாவது செய்து தான்இருப்பதை காட்டிக்கனும். நம்ம தமிழ் நாட்டு வஹ்ஹாபிகள் தர்கா, மத்ஹபு, இமாம் எதிர்ப்பு, ரமளானில் கோடி பரிசு மழை, இதோ, அதோ, குர்ஆன் வழி, நபி வழி, இல்லாதது பொல்லாததுக்கு கூட்டம், கான்பிரன்ஸ், போராட்டம், பேயாட்டம், பப்பளக்கா பளபளக்கா பேனர்கள், ஜோடு உடரது, கஷ்த் அடிப்பது என எதையாவது செய்து பேர் வாங்க வேண்டி ஆட்டம் போடுகிறார்கள். எல்லா வஹ்ஹாபிகளுக்கும் வைட்டமின் பா என்ற பணம் தான் அடிப்படை.

*அதுசரி இந்த ஆய்வு முழுவதும் கிடைக்குமா? என்றோம்.* ஏன் கிடைக்காது. The 500 most influential muslims in the world என்று ஆய்வு நூலாகவே வெளியாகிவிட்டது. http://www.scribd.com/doc/22652672/The-500-most-influential-Muslims-in-the-world என்ற வலைதளத்தில் புத்தக வடிவில் உள்ளது படித்துப் பாரும்! என்றார் ஒட்டகனார்.

உண்மையிலேயே உலகம் முழுக்க முஸ்லிம்கள் *90%* சுன்னத் வல் ஜமாஅத்தார் என்றும் தர்கா வலிமார்களை தரீகாவை ஏற்றுக் கொள்பவர்களாகவும் உள்ளது மகிழ்ச்சியான செய்தி. அந்த *500* பேரில் அமீனே மில்லத் என்பவர் ஆலா ஹஜ்ரத்தின் குரு. ஷேக் பரம்பரையான அமீனே மில்லத் சையத் ஷா அமீன் மியான் பரகாத்தி என்பதும், இவர்கள் அஹ்லே பைத் சில்சிலாவில் காதிரிய்யா காரர்கள் என்பதும், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் உருது டிபார்ட்மெணடின் தலைவர் என்பதும் மஹ்ரரா ஷரீஃப் U.P தைக்காலில் சஜ்ஜாதா நிஷீன் என்பதும் இவரிடம் லட்சக்கனக்கானவர்கள் பைஅத் பெற்றுள்ளார்கள் என்பதும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

*அரேபியப் பேரித்தம் பழங்களும், பீரானி பீ பெருநாள் புகழ் ஷீர் குர்மாவும் கொடுத்து உபசரித்தார். பிளேட்டும் கப்பும் காலிசெய்து அல்ஹம்து லில்லாஹ் ஏப்பம் விட்டு...*

*பம்பாய் கேசவ் கசாப் பல்டி, ஹெட்லி விவகாரம், என்ன ஒரே குழப்பம் ஒன்றும் புரியவில்லையே! என்று அடுத்த செய்திக்கு*

மாறினோம்.

இதில் என்ன குழப்பம்? அமெரிக்க CIA ஏஜெண்டு தான் டேவிட் கோல்மென் ஹெட்லி. இந்தியாவும், பாகிஸ்தானும் போரிட்டுக் கொள்ள எவ்வளவோ கொம்பு சீவியாச்சு. ஆனா போரே நடக்க மாட்டேங்குது. அதுதான் மும்பை தீவிரவாத தாக்குதல், அதிகாரி கர்கரே கொலை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய். நடத்தி முடித்தவுடன் ஹெட்லியை அலேக்காக தூக்கி ஆ!ஈ!அது!இது! லொட்டு, லொசுக்குன்னு ஹெட்லியிடமிருந்து உண்மைகள் வரும் முன் அமெரிக்காவிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள். இதை நான் சொல்லவில்லை.

**ஆதாரம்:1**

அமெரிக்க உளவு அமைப்பான CIAவின் ஆட்கள் தான் உலகில் அனைத்து நாடுகளிலும் உளவாளிகளாக உள்ளனர். ஹெட்லி எங்கள் ஏஜெண்ட் அல்ல. CIA அறிவிப்பு! (நன்றி தினமணி 18.12.2009)

(எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை.)

**ஆதாரம்:2**

இந்திய- பாக்கிஸ்தான் போருக்கு கொம்பு சீவி விடுவது.

மும்பை தாக்குதல் போன்று மீண்டும் நடந்தால் இந்தியா பொறுத்துக் கொள்ளாது. அமெரிக்க ராணுவ அமைச்சர் ராபர்ட் கேட்ஸ். (நன்றி.தினமணி 21.01.2010 )

(இவர் அமெரிக்காவுக்கு அமைச்சரா? இல்லை இந்தியாவுக்கு அமைச்சரா? நம் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் என்ன ஆனார்? பாரதப் பிரதமரைத் தான் கேட்க வேண்டும்.)

**இரத்தம் குடிக்க வெள்ளை நரி துடித்துக் கொண்டிருக்கிறது...!**

**ஆதாரம்:3**

உண்மையிலேயே இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொள்ள வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம். அப்போது தான் அதன் ஆயுத வியாபாரம் செழிக்கும். இப்போது உடனடியாக ஈரான் மீது போர் தொடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே இந்தியா-பாகிஸ்தான் போருக்குக் கட்டியம் கூற அமெரிக்க ராணுவ மந்திரி வந்திருக்கிறார். ரத்தம் குடிக்க வெள்ளை நரி துடித்துக் கொண்டிருக்கிறது. (நன்றி :குமுதம் ரிப்போர்ட்டர் 31.01.2010)

என்ன எல்லாம் ஜெலட்டின், பாஸ்பரஸ் நெடி செய்திகளாய் இருக்கிறது. அன்பான, அமைதியான செய்தியைக் கூறவும் என்றோம்.

நபிகளாரின் பேரனார் ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் முஹர்ரம் பண்டிகை இவ்வருடமும் சிறப்பாய் நடந்துள்ளது. அதில் குறிப்பாக சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள முதுவன் திடல் என்ற கிராமத்தில் முஸ்லிம்களே இல்லாத போதும் அவர்கள் முன்பு நடத்தி வந்த முஹர்ரம் பண்டிகையை சகோதர சமயத்தவரான இந்து மக்கள் ஹஜ்ரத்தை அழைத்து சென்று இமாம் ஹுஸைனாரின் பெயரில் பாத்திஹா ஓதி சிறப்பாய் நடத்தியுள்ளார்கள்.

இதனால் தான் நாங்கள் செழிப்பாய் வாழ்கிறோம், எனவே தொடர்ந்து செய்கிறோம் என்று பேட்டி கொடுத்ததை 7.12.2009 குமுதம் ரிப்போர்ட்டரில் வந்துள்ளது. எடுத்துப் படித்துக் காட்டினார்.

மத்திய அரசின் அனுமதியை நாம் வாங்கியது தெரியுமா உமக்கு? என்றோம்.

தெரியும்! தெரியும்! ஆமை வேகத்திற்கு வாழ்த்துக்கள். என்றார்.

வாழ்த்துக்களுக்கும் இவ்வளவு வக்கனையா வேண்டாத வம்பை விலைகொடுத்து வாங்குவானேன்?

வம்பு விவகாரம் பஞ்சாயத்து ஆவதற்கு முன் சலாம் சொல்லி நாம் எழுந்து விட்டோம்.

---

# அன்புள்ளங்கொண்ட சகோதர சகோதரிகளே மிகவும் அனுதாபத்துடன் சிந்திக்க வேண்டிய விஷயங்கள்

வயது வந்த பெண்களை திருமணம் செய்து கொடுக்க போதிய வசதி இல்லாமல் பெண்வீட்டார்கள் இரத்தக்கண்ணீரை வடித்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் மாப்பிள்ளை வீட்டார்கள் தன் மகனுக்கு பெண்வீட்டார்களிடம் சென்று பெண்கேட்டு வற்புறுத்தி பெரிய தொகைகளை வாய் கூசாமலும், வெட்கம் இல்லாமலும் கேட்கிறார்கள்.

பெண் வீட்டார் எப்படியாவது விவாகம் செய்துவிட வேண்டும் என்று நினைத்து போதிய வசதியில்லாமல் தங்கள் வீடு, மனை, நிலம், இவைகளை வற்புறுத்தலின் பேரில் ஈனக்கிரயங்களுக்கு விற்று மாப்பிள்ளை வீட்டார்களிடம் பெருந்தொகைகளை கொடுக்கிறார்கள்.

இதைக் கொஞ்சமும் வெட்கம் இல்லாமல் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு மணம் முடித்துக் கொள்கிறார்கள். மேலும் சாப்பாடு மற்றும் செலவினங்களையும் பெண் வீட்டார்களே செய்யும்படி செய்துவிடுகின்றனர். இதனால் பெண்வீட்டார்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்படி பெண்வீட்டாருக்கு சிரமம் கொடுப்பது நியாயம் ஆகுமா? அநியாயமாகாதா?

இவர்கள் வாங்கும் தொகைகள் லஞ்சம் ஆகாதா? லஞ்சம் வாங்குவது மகா பெரிய குற்றமல்லவா? பெண் வீட்டார்களிடம் பெரிய தொகையை வாங்கி வாழலாமா? வாழத்தான் முடியுமா? ஒரு பக்கம் மனவேதனை மறு பக்கம் சந்தோஷம் இது மகா பெரிய பாவமில்லையா?

மேலும் மணமகனுக்கும் தங்கைமார்களும் இருப்பார்கள் அல்லவா. அவர்களுக்கும் இந்நிலை தானே! அதுமட்டுமல்ல, பெண்களிடம் லஞ்சம் வாங்கி மணமுடித்தால் ஆண்கள் பெண்களுக்கு அடிமையாகி விடவில்லையா? தலை நிமிர்ந்து நடக்க முடியுமா? சிந்தனை செய்து பாருங்கள். திருமணம் முடித்து சில காலங்களுக்குப் பின் பெற்றோர்களை பிரிந்து மனைவியோடு ஒத்துப் போய் விடுகின்றனர், பெற்றோர்களையும் கவனிப்பதில்லை. இதை நன்கு உணர்ந்தும் கூட பெற்றோர்கள் அதிகமான கைக்கூலி வாங்குவதை நிறுத்துவதில்லை. இவர்களின் இந்த தீயச் செயல் இவர்களையே திரும்ப வந்தடைகிறது. ஆதலால் இதை உணர்ந்து சீர்திருத்தம் அடைய இறைவன் நல்லருள் புரிவானாகவும். ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

காலம் சென்ற ஞானி ஸூஃபி ஹஜ்ரத் அ.த.அப்துல் மஜீத் சாஹிப் கொடிக்கால் பாளையம் இவர்களின் பதிப்பை நன்றியுடன் மறுபதிப்பாக வெளியிட்டோர்.

**இங்ஙனம்,**

**பரம்பரை டிரஸ்டி & சஜ்ஜாதா நிஷீன்,**

**கிள்ளை தர்கா, கிள்ளை -608102.**

**சிதம்பரம் தாலுக்கா.**

***10-10-1984.***

# சென்னை மாநகரில் மார்க்கப் பற்றுதலுடன் ஆங்கிலப் புத்தாண்டு

**தர்கா புகைப்படக் கண்காட்சி :**

ஆங்கிலப் புத்தாண்டு தினம் பொதுவாக எல்லோருக்கும் விடுமுறை என்பதால் நம்மவர்களும் இஷ்டம் போல் பொழுதைக் கழிக்கிறார்கள்.

அது சற்று மாற்றமாக மார்க்கம் சம்பந்தமாக இருக்கட்டுமே என்று தங்களின் உலகளாவிய தர்காக்களின் புகைப்பட கண்காட்சிக்கு ஏற்பாடு செய்து தாருங்களேன் என்று நமக்கு தமிழக தலைநகரிலிருந்து தொலைப் பேசி அழைப்பு...

பேசியவர் பல அறிஞர்களை அழைத்து மார்க்க சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்யும் நற்பணியாளர் மௌலானா மாலிக் ரப்பானி ஹஜ்ரத் அவர்கள். நாம் அதற்குத்தானே காத்திருந்தோம். உடனே ஒப்புக் கொண்டோம். ஆசிரியர், ஜனாப் மொய்தீன், திரு குமார் ஆகியோர் செல்வதாக முடிவு செய்து விடுமுறையாதலால் டிக்கெட்டுக்கு கஷ்டமாகுமே என்று அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினோம்.

நமக்கு பிரயாணக் கவலையில்ல. தாராள மன(ய)ம் படைத்த ஆசிரியர் பெருந்தகை செலவு எவ்வளவு ஆனாலும் கவலைப்படாமல் பிளைட்டி லாவது அழைத்துச் செல்வார் என்ற திடமான நம்பிக்கை தான்.

ஒல்வோ பஸ்ஸில் ரிட்டன் டிக்கெட்டுடன் வந்து சேர்ந்தார்.

**01.01.2010 கிண்டி பஸ் ஸ்டாப் :**

எப்படி இருக்குமோ என்று காலை குளிரில் நடுங்கியபடியே சூட்கேஸ், பேனர், மூட்டை முடிச்சுக்களுடன் சென்னையில் இறங்கினோம். மௌலானா மாலிக் ரப்பானி அவர்கள் ஆட்டோவுடன் வந்து நம்மை பழைய வண்ணாரப் பேட்டையில் உள்ள கண்காட்சி நடக்கவிருந்த டிப்பார்ட் மெண்ட் ஸ்டோருக்கு அழைத்துச் சென்றார்.

முன்பு அங்கே சுபிக்ஷா சூப்பர் மார்கெட் இருந்ததாகவும் தற்போது அது காலியாக இருப்பதாகவும் தர்கா வலிமார்களின் துஆ வேண்டி கண்காட்சிக்காக வழங்கியுள்ளதாகவும் அதன் உரிமையாளர் ஆலி ஜனாப் வண்ணை.K.ஹுஸைன் அவர்கள் தெரிவித்தார். காலை 9 மணிக்கு கண்காட்சி திறப்பு விழா என்பதால் அந்த ஹாலில் புகைப்படங்களையும் பேனர்களையும் புத்தகங்களையும் பார்வைக்கு அலங்கரித்து வைத்தோம்.

நாம் எதிர் பார்த்ததைவிட ஃபீ ஸபீல் டிரஸ்டின் ஆலி ஜனாப் மௌலானா இஜாஸ் அஹ்மத் பீர் சாஹிப் தம் முரீதீன்களின் உதவியுடன் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**கண்காட்சி திறப்பு விழா**

உலகளாவிய தர்காக்கள் புகைப்பட கண்காட்சியின் திறப்பு விழாவிற்கு காலை 9.30 மணிக்கு இந்திய ஜனநாயக கட்சியின் செயளாலர் ஆலி ஜனாப் அக்ரம் கான் அவர்களும் இன்னும் பலரும் வருகை தந்திருந்தனர்.

முஸ்லிம் முஹல்லாவானதால் ஜும்மாவிற்குப் பிறகு சாரை சாரையாக மக்கள் குடும்பத்துடன் வந்து பார்த்தார்கள். பலர் காணக் கிடைக்காத தம்மால் செல்ல முடியாத பெரிய பெரிய நாதாக்களின் மஹான்களின் தர்கா புகைப்படங்களை கண்முன் கண்டு பரவசம் பொங்க ஒவ்வொரு புகைப்படத்தையும் இரு கைகள் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். தயவு கூர்ந்து நகருங்கள் மற்றவர்களும் பார்க்க வேண்டியுள்ளது என்று அடிக்கடி கேட்டுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது.

யாரும் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்க வில்லையா என்றால்... உலகளாவிய தர்காக்களின் புகைப்படம் என்பதால் எந்த வஹ்ஹாபியும் வரவில்லை என்பது ஒரு காரணம்.

ஒரே ஒரு ஹஜ்ரத் தர்கா புகைப்பட கண்காட்சி என்று போட்டு விட்டு தேவ்பந்து எதிர்ப்பு பேனர்களை ஏன் வைக்கிறீர்கள்? அஷ்ரப் அலீ தானவி, ரஷீத் அஹ்மத் கங்கோஹி, தப்லீக் ஜமாஅத் CIAஏஜெண்ட், வஹ்ஹாபிய ஜமாஅத்தவர்கள் க ாகம் சாப்பிடலாம் என்று வஹ்ஹாபிகளின் புத்தகங்க ளிலிருந்து உருதுவில் உள்ள மூல வாசகங்களை ஸ்கேன் செய்திருந்த பேனர்களை பார்த்து இதையெல்லாம் ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று முரண்டு பிடித்தார்.

இத்தனைக்கும் அந்த மஹா பெரிய ஹஜ்ரத் தன்னை பக்கா சுன்னத் வல் ஜமாஅத் என்று கூறிக் கொள்கிறார். அவருக்கும் அது வஹ்ஹாபிகளின் வாசகங்கள் தான் என்பது நன்றாகவே தெரியும். இருந்தும் ஏன் அந்த வஹ்ஹாபிய எதிர்ப்பு பேனர்களை எடுக்க வேண்டும் என்கிறார் என்பதுதான் எங்களுக்கு விளங்க வில்லை.

ஹஜ்ரத் நீங்கள் இந்த தேவ்பந்தி வஹ்ஹாபியக் கொள்கைகளை ஆதரிக்கிறீர்களா என்று மௌலானா மாலிக் ரப்பானி கேட்டது தான் தாமதம் இல்லை என்று உடனே மறுத்தார்.

சரி தப்லீக் ஜமாஅத் ஷைத்தான்களின் ஜமாஅத் CIA ஏஜெண்டு என்ற பேனரையாவது அகற்றுங்கள் என்றார்.

ஹஜ்ரத் இதுவும் கூட எங்களின் சொந்த கருத்தல்ல லிபிய அதிபர் 1986 இஸ்லாமிய மாநாட்டில் பேசியது பகிரங்கமாக அஹ்வால் என்ற பத்திரிக்கையில் வெளிவந்ததை தான் ஸ்கேன் செய்து வைத்துள்ளோம் என்று ஜனாப் அஜீஸ் அவர்கள் முகத்திற்கு நேராக கூறியதும், அத்தே... பெரிய ஹஜ்ரத்தால் ஒன்றும் கூற முடியவில்லை.

ஹஜ்ரத் எங்களுக்குத் தெரிந்த வகையில் நாங்கள் நடத்துகிறோம். நீங்கள் துஆ செய்யவும் என்று கூறியதும் ஹஜ்ரத் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

மக்ரிப் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆலி ஜனாப் அல்ஹாஜ் சையத் சுலைமான் ஹுஸைனி காதிரியுல் சிஷ்த்தி சாஹிப் அவர்கள், நான் யாதே ஹுஸைன் மஹ்பில் நடத்தி பயான்கள் வைக்கவுள்ளேன். எங்கள் சைதாப் பேட்டை பகுதியில் இது போல் நடத்த வேண்டும் இடவசதி வர போக எல்லாம் என் பொறுப்பு என்று நம்மை முன்பே கேட்டிருந்தார் அந்த அறிவிப்பு நோட்டீஸ்களும் வினியோகம் செய்யப்பட்டன.

**10.1.2010 *OVER TO* சைதாப் பேட்டை**

*10.01.2010* அன்று காலை *9.00* மணி முதல் மாலை *6.00* மணி வரை உலக தர்கா புகைப்பட கண்காட்சி சிறப்பாய் நடைபெற்றது. தேவ்பந்து பேனர்களுக்கு இங்கும் எதிர்ப்பு கிளம்புமா என உள்ளூர சந்தேகத்துடன் இருந்த நம்மைப் பார்த்து யார் என்ன செய்வார்கள் அதையும் பார்ப்போம் என்று சொல்லி எல்லா பேனர்களையும் தைரியமாக வெளியே மாட்டி வைத்தார் ஆலி ஜனாப் சுலைமான் ஹுஸைனி சாஹிப் அவர்கள்.

நிகழ்ச்சியில் கண்ணியமும் சங்கையும் நிறைந்த தமிழ் நாடு அரசாங்க தலைமை சர்காஜியார் மௌலானா மௌலவி ஆலி ஜனாப் சலாஹுத்தீன் அய்யூப் பங்கு கொண்டு புனித மக்கா ஷரீஃப், புனித மதீனா ஷரீஃப், பைத்துல் முகத்தஸ் மற்றும் உலகளாவிய தர்காக்களின் புகைப்படங்கள் என்று ஒவ்வொன்றையும் பார்த்து சிலாகித்து கூறினார்.

நஅதே ரஸுல் மீலாது பாமாலைகளும், தலைமை காஜியாரின் யாதே ஹுஸைன் சிறப்பு பயான்களும் நடைபெற்றன. ஆலி ஜனாப் ஏஜாஸ் அஹ்மத் பீர் சாஹிப், மௌலானா மௌலவி மாலிக் ரப்பானி மற்றும் மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முழு நிகழச்சிக்குமான ஏற்பாடு களை ஆலி ஜனாப் சையத் சுலைமான் ஹுஸைனி சாஹிப் அவர்களின் இரு புதல்வர்களான சையத் யாஸீன் ஹுஸைனி, சையத் தாஹா ஹுஸைனி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தார்.

**சென்னை மாநகரில் 1.1.2010 & 10.1.2010 இரு நாட்கள் நடந்த உலகளாவிய தர்காக்களின் புகைப்பட கண்காட்சி மற்றும் தப்லீகிய எதிர்ப்பு பேனர்களை ஆர்வமுடன் பார்க்கும் பொதுமக்கள்...**



**வண்ணாரப்பேட்டையில் தர்காக்கள் புகைப்பட கண்காட்சியை பார்வையிடும் பொதுமக்கள். 01.010.2010**





**ரஷ்யாவில் உள்ள புனித தர்காக்களின் புகைப்படங்களை உற்று நோக்கும் சிறுவன். சைதாப்பேட்டை. 01.01.2010.**



**சைதாப் பேட்டையில், ஹஜ்ரத் சையத் அஹ்மத் பீர் ஹுஸைனி பாபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சில்லா ஷரீபில் அமைந்திருக்கும் 12 மஹான்களின் கொடி மரங்கள். முன்புறம் தொங்கவிடப்பட்ட தப்லீக் தேவ்பந்திய எதிர்ப்பு பேனர்கள். நாள் : 10.01.2010**



**சில்லா ஷரீபின் உட்புறத் தோற்றம். பார்வையிடும் பொதுமக்கள். 10.01.2010**

படித்தவர்கள், பாமரர்கள் என எல்லா தரப்பினரும் பார்த்து பாராட்டி தங்கள் கருத்துக்களை எங்களின் பதிவேட்டில் பதித்துச் சென்றார்கள். அவைகளில் சில தர்கா இதழின் வாசகர் பார்வைக்கு...

இறைவனின் அருட்கொடை நபிகள் நாயகத்தின் தோழர்கள், வலிமார்கள் - அவுலியாக்கள் எல்லோரின் அடக்கஸ்தலங்கள் முஸ்லிம் சமுதாய மக்கள் கண்டு மகிழ்ந்து ஈமானின் உறுதியான இஸ்லாம் மார்க்கம் தழைத்தோங்கவும், மக்கள் ஈமானை புதுப்பித்துக் கொள்ளவும் முஸ்லிம் சமுதாயம் மென்மேலும் வளரவும் தாங்கள் தங்கள் தர்கா மாத இதழை அறிமுகம் செய்தமைக்கும் எல்லா முஸ்லிம் சமுதாய மக்கள் சார்பாக என் மனதார வாழ்த்துகிறேன்.

**A.மெய்தீன் பாஷா திருவண்ணாமலை**

மிக அருமை அடுத்த ஆண்டு இஸ்லாமிய வருடம் முஹர்ரம் மாதம் இதை மிகப் பெரிதாக செய்ய வேண்டும்.

**K.Mஅன்சர் அலி சென்னை-21**

சத்தியத்தை நிலைநாட்ட முயற்சி செய்யும் ஒரு நல்ல முயற்சி. அல் ஹம்து லில்லாஹ். சிறப்பான வேலை.

**முஹம்மத் ஜுபைர், சென்னை-1**

நல்ல வரவேற்கத் தக்க நிகழ்ச்சி இதை விரிவுபடுத்தி தமிழகம் முழுவதும் பரப்ப வேண்டும் இன்ஷா அல்லாஹ்.

**P.பந்தே நவாஸ்.வண்ணாரப் பேட்டை.**

Performances are very good.very most merciful, this photography will never see in our life. Please conduct this program every year in this place. Thanks.

**Badrunnissa. chennai-21**

எல்லா வெளிநாட்டில் உள்ள தர்காக்களைப் பார்த்து மிகவும் பரவசமடைந்தேன். ஆனால் நமது இந்தியாவில் உள்ள அஜ்மீர், டெல்லி ஜும்மா, ஆக்ரா, அஜ்மீர் டெல்லி தர்கா புகைப்படங்களை இங்கே காணவில்லை என்பது வருத்தம்.

**பாலசுந்தரம், சென்னை-21**

**(அடுத்த கண்காட்சியில் சேர்த்துக் கொள்கிறோம். -ஆசிரியர்)**

இது அல்லாஹ்வின் கிருபை உடையதாக இருக்கும். இந்த காட்சியை ஒவ்வொருவரும் தங்கள் மஹல்லாவில் நடத்த வேண்டும். இதை எல்லோரும் பார்த்து வலிமார்களின் உண்மை நிலையை அறிந்து பயன் அடைய வேண்டும் என்பது எனது மிகப் பெரிய துஆவாக இருக்கும்.

**முஹம்மத் ஜஃபருல்லாஹ், சென்னை-4**

இந்த கண்காட்சியை பார்க்க பார்க்க மனதிற்கும் என்னுடைய ஆன்மாவிற்கும் நிம்மதி ஏற்பட்டது. இன்னும் அதிக இடங்களில் இந்த கண்காட்சி நடக்க அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறேன்.

**ஹாரூன் ஷரீஃப், சென்னை-12**

புகைப்பட கண்காட்சி போல் தோற்றமளிக்கவில்லை. நாமே தர்காக்களின் முன் நின்று ஜியாரத் செய்வதைப் போல் உள்ளது. புகைப்பட கண்காட்சி வைத்தவர்களுக்கு நன்றி.

**அ.கா.அக்பரின்னிசா, சென்னை-14**

It was very informative some knowledge gaining about Islam. Good.

**Syed Mohammed Mohatharam, Chennai**

இந்த தர்காக்களின் மஹான்களின் புண்ணியத்தில் எங்க வீட்டு கஷ்டங்கள் எல்லாம் போக வேண்டும் என்று வேண்டுகிறோம். பிள்ளைகளுக்கு வேலை கிடைக்க வேண்டுகிறோம்.

**N.கணேசன், சென்னை-17**

இன்றைய காலத்துக்கு இது தேவையானது. இன்ஷா அல்லாஹ் இன்னும் விரிவுபடுத்துங்கள்.

**S.முஹம்மத் இர்பான், சென்னை-43**

இன்றைய காலத்திற்கு இது மிகவும் அவசியமானது. தர்காவின் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு இது மிகவும் அவசியமானது.

**A.ஷபானா, சென்னை-15**

**உதவிய நல் உள்ளத்திற்கு நன்றி!**

ஆலி ஜனாப் அப்துஸ் சலாம் பரங்கிப்பேட்டை வளர்ச்சி நிதி ரூ.500/

# சொர்க்க லோகத் தலைவி அன்னை பாத்திமா நாயகியாரின் ஒரு பெருநாள் பொழுது...!

ஊரெங்கும் நாளை வர இருக்கும் பெருநாளுக்காக சந்தோஷமும், குதூகலமும் கொப்பளிக்க மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

இருலோக ரட்சகரான நபியே கரீம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அருந்தவப் புதல்வி செர்க்கலோக தலைவி காத்தூனே ஜன்னத் பாத்திமா நாயகி அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களை ஓதியவர்களாக எளிய ஒட்டுப்போட்ட ஆடையில் திரிகையில் கோதுமை அரைத்தவர்களாக உள்ளார்கள். இந்த கோதுமையும் எப்படி வந்தது என்றால்...

வெளியே சென்று வீடு திரும்பிய அலி கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்கள் பாத்திமா உண்பதற்கு ஏதும் இருக்கிறதா? என வினவ இரண்டு வேளை பட்டினிதான். குழந்தைகளும் வெளியில் பட்டினியுடன் தான் விளையாடிக் கொண்டுள்ளனர். கோதுமையோ, மாவோ ஏதுமில்லை என பாத்திமா நாயகியார் பணிவுடன் பதிலளிக் கிறார்கள். உடனே வெளியே கிளம்பிய அலிபின் அபூ தாலிப் அவர்கள் ஏதாவது வேலை கிடைக்குமா? என தேடி அலைகிறார்கள். முடிவில் ஒரு யூதன் தன் ஒட்டகத்திலிருந்து ஏராளமான பொதி மூட்டைகளை இறக்குவதற்கு யோசனையில் இருக்கையில் ஐயா! ஏதும் வேலை இருக்கிறதா? குரல் கேட்டு திரும்பிய யூதன் ஆம் இந்த பொதி மூட்டைகளை இறக்கி உள்ளே அடுக்க வேண்டும்.

அடுத்த சில நிமிடங்களில் பசியையும் பொருட்படுத்தாது வேலை யை கச்சிதமாக முடித்து வேர்வை வழிய தம்முன் நின்ற அலி கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்கள் கையில் ஒரு திர்ஹம் தருகிறான் அந்த யஹூதி. சட்டென்று தம் உள்ளங்கையை மூடியவர்களாக விறுவிறுவென நடக்க ஆரம்பித்தார்கள். பேரம் ஏதும் பேசாமல் கொடுத்ததை வாங்கிக் கொண்டு போகிறாரே என யஹூதி திகைப்புடன் விழிகள் விரிய நிற்கிறான். அவனுக்கு எங்கே தெரியப்போகிறது... அவசரமாகப் போனால் தானே கடை மூடும்முன் கோதுமையோ, மாவோ வாங்க முடியும். தேடிப்பிடித்து அவ்வாறே கடைசியாக சாத்தப் போகும் முன் ஒரு திர்ஹத்தை கொடுத்தால் கடைக்காரன் அதற்கு சிறிது கோதுமையைத் தருகிறான். ஒட்டமும் நடையுமாக வீடு வந்து கொடுத்த கோதுமைதான் பாத்திமா நாயகி அவர்கள் அரைத்துக் கொண்டுள்ள கோதுமை. இது மாவான பின் ரொட்டி சுட்டு எல்லோரும் பசியாற வேண்டும்.

இந்நிலையில் விடிந்தால் பெருநாள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கண்மணிகளான இமாம் ஹஸனாரும், இமாம் ஹுஸைனாரும் துள்ளிக் குதித்தவர்களாக உள்ளே வந்தார்கள். அன்னை பாத்திமாவை அணைத்துக் கொண்டவர்களாக அம்மா பெருநாளுக்கு உடுத்திக் கொள்ள புத்தாடைகள் எங்களுக்கு இருக்கின் றனவா? என ஆவல் ததும்ப கேட்டனர். சுவனத்தின் தலைவி பாத்திமா நாயகி ஆம் அல்லாஹ் தருவான் என பதில் உரைத்தனர். இப்பதிலில் திருப்தியுற்ற வர்களான பாத்திமா நாயகியின் குலக்கொழுந்துகளான இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

சுப்ஹுத் தொழுகைக்கு தயாராகி செவ்வனே தொழுகையை முடித்து தம் இரு கரமேந்தியவராக, யா அல்லாஹ்! அகிலங்கள் அனைத்தையும் படைத்து பரிபாலிப்பவனே! உன் சிருஷ்டிகள் மீது உன்னையன்றி யார் கருணை புரிவார். உன் ஹபீபும் மஹ்பூபுமான ரஸுலுல்லாஹ் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டால் பிள்ளைகள் இருவருக்கும் புத்தாடை வழங்குவாயாக! என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற் றுவாயாக! என இறைஞ்சியவாறே இருக்கையில் வாசலில் யாரோ அழைக்கும் குரல் கேட்டு விரைகிறார்கள். தூய வெள்ளாடை உடுத்திய பெரியவர் இந்தாருங்கள் என பொட்டலத்தை அளிக்கிறார்கள். உள்ளே வந்து பொட்டலத்தைப் பிரித்து பார்க்கையில்... அம்மா புத்தாடைகள் எங்களுக்கு தாருங்கள் நாங்கள் குளித்து விட்டோம்! என சந்தோஷத்துடன் கூறிய குழந்தைகளுக்கு புத்தாடைகளை எடுத்து அளிக்கிறார்கள் வல்ல நாயனுக்கு ஷுக்ர் செய்தவர்களாக.

வாசகர்களே! நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஈரக்குலைக்கு ஒப்பான அன்புமகள் பாத்திமா நாயகி அவர்களுக்கு செல்வத்திற்கோ, தேவையானவற்றை அளிப்பதிலோ எந்த குறையும் வைக்கமாட்டான் வல்ல இறைவன். எனினும் வறுமையை அவர்களாகவே விரும்பி ஏற்றுக்கொண்ட ஒன்று. அவ்வாறு உலக ஆசைகளையும், தேவைகளையும் வெறுத்தார்கள். எளிமையையே விரும்பினார்கள். பணிவும் ஷுக்ர் செய்யும் பண்பும் தவக்கலும் மிகைத்தவர்களாக வாழ்ந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வஸீலா தேடுவதின் பாங்கையும், சிறப்பையும் இங்கே நாம் அனைவரும் உணர வேண்டும்.

நாயகத்தின் பொருட்டாலும், சொர்க்கலோகத் தலைவி அன்னை பாத்திமா நாயகியாரின் ச்சாதரின் பொருட்டாலும் இருலோக நன்மைகளை நம் அனைவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக! அமீன்! அமீன்!! யா ரப்பல் ஆலமீன்!!! பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்!

## தர்கா இதழ் நடத்தும் கட்டுரைப் போட்டிகள் அறிவிப்பு

வரும் முஹ்யித்தீன் ஆண்டகையின் 11ஆம் பாத்திஹாவை முன்னிட்டு வாசகப் பெருமக்களுக்கு கட்டுரைப் போட்டிகள் அறிவிக்கப்படுகின்றன. தர்கா இதழ் உலமா குழு தேர்ந்தெடுக்கும் முதல் மூன்று கட்டுரைகளுக்கு சாஹெப் வலியுல்லாஹ் உரூஸ் கந்தூரி மேடையில் பரிசுகள் வழங்கப்படும்.

**தலைப்புகள்...**

1. **ரஸுலை நேசிப்பது ஈமானின் உயிர் ஆகும்.**
2. **தீனை ஹயாத்தாக்கிய முஹ்யித்தீன் எஜமான்...!**
3. **இந்தியாவில் இறைநேசர்களின் வருகை.**
4. **வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு நேர்மாற்றமானது.**

**விதிமுறைகள்...**

1. மேற்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுத வேண்டும்
2. டிம்மி ஷீட்டில் இரண்டு பக்கங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
3. மதர்ஸா மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. 15.04.2010ஆம் தேதிக்குள் கட்டுரைகள் நமக்கு கிடைக்கும் படி அனுப்ப வேண்டும்.

24.04.2010ஆம் தேதி தஞ்சை சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் உருஸ் தின்னத்தில் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியரின் முடிவே இறுதியானது.

**தங்களின் கட்டுரைகள் எமக்கு அனுப்ப வேண்டிய முகவரி :**

**கட்டுரை போட்டி தேர்வு குழு**
**74/176- முதல்மாடி, காந்திஜி ரோடு,**
**இரட்டை மஸ்தான் தர்கா எதிரில்,**
**தஞ்சாவூர் - 613001**
**e-mail : dargah_tnj@yahoo.com**

### முப்பெரும் விழா :

21.01.2010 தஞ்சை கீழவாசல் சிராஜுத்தீன் நகர் ஹிஸ்புல்லாஹ் சபை ஸூஃபி மன்ஜின் நடத்திய நான்காம் வருட புனித மீலாது விழா மற்றும் ஹைத்ராபாத் சூபி ஹஜ்ரத் மற்றும் காயல்பட்டிணம் அப்துல் காதர் சூபி ஹஜ்ரத் அவர்களின் கந்தூரி விழாக்களை அல்ஹாஜ் அஷ்ஷைகுல் காமில் மௌலானா மௌலவி முஹம்மத் அலி சைஃபுத்தீன் ஆலிம் சூபி மத்தஜில்லஹுல் ஆலி தலைவர் தமிழ்நாடு சுன்னத் வல் ஜமாஅம் உலமா சபை. அவர்கள் தலைமையில் நடந்தது.

அஸர் தொழுகைக்குப்பின்னால் மார்க்கச் சொற்பொழிவும், மக்ரிபு தொழுகைக்குப் பிறகு காதிரிய்யா ராத்தீபு மஜ்லிஸும் நடைபெற்று துஆவிற்குப் பிறகு நேர்ச்சை வழங்கப்பட்டது. சூபி மன்ஜில் கட்டிட வேலை நடைபெறுவதால் கட்டிடப் பணிகளுக்கான நிதியை கொடுத்துதவும் படி வேண்டப்பட்டது. தொடர்புக்கு மௌலானா மௌலவி அல் ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக். செல் :9940586090

அல்லமா பீரே தரீகத் முஹம்மத் அலி சைஃபுத்தீன் ரஹ்மானி ஹஜ்ரத் அவர்களின் முரீது பிள்ளைகள் ஏற்பாடு செய்த இவ்விழாவில் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினராக தங்கள் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

### பாந்தா மதர்ஸாவில் பட்டமளிப்பு விழா

ஈஸவி 2010 பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி ஹி1431 ஸஃபர் பிறை 21ஆம் தேதி சனிக் கிழமை இரவு 8 மணியளவில் உத்திரப் பிரதேசம் மாநிலம், புந்தேல் கண்ட் வட்டம் பாந்தா மாவட்டத்தின் தலைநகரான பாந்தா நகர ஈத்காஹ் மைதானத்தை ஒட்டியுள்ள சர்காரே ரப்பானி அவ்லியா தர்காஹ் வளாகத்தில் நடந்தேறிய பட்டமளிப்பு விழாவில் 450க்கும் மேற்பட்டவர்கள் மௌவிகளாகவும், ஹபிஸ்களாகவும், காரிகளாகவும், பட்டம் பெற்றனர்.

விழாவில் 9 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருந்ததால் விழா மேடையில் பட்டம் பெற்ற உலமாக்கள் 9 மொழியிலும் சிற்றுரை ஆற்றினார்கள். பட்டம் பெற்றவர்களது புத்தாடை, தலைப்பாகைத் துணி முதலியவற்றை சென்னையைச் சேர்ந்த ஜனாப் அஜீஸ் சேட் அவர்கள் அளித்து கௌரவித்தார்கள். பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பஹாரே ஷரீஅத், கானுனே ஷரீஅத் போன்ற புத்தகங்கள் வெகுமதியாக வழங்கப்பட்டன.

விழாவில் பதாயூன், முபாரக்பூர் பகுதிகளிலிருந்து வந்த பேச்சாளர்கள், சிறப்புரையாற்றினார்கள். ரப்பானியா குடும்பத்து சையதுமார்களும், மஷாயிகீன்களும் மேடையை அலங்கரித்தது கண்கொள்ளா காட்சியாய் இருந்தது.

## செய்திகள் தருவது தர்கா

மதரஸாவின் ஸ்தாபகர் அஷ்ஷைகு சையாஹே ஏஷியா அல்லாமா பீரே தரீகத் சையத் மஜ்ஹர் ரப்பானி கிப்லா மத்தஜில்லஹுல் ஆலி முன்னிலை வகிக்க மதரஸாவின் முதல்வர் ஷைகுத்தப்ஸீர் சையத் ஷா காஜீ ரப்பானி ஹஜ்ரத் கிப்லா விழா மேடையை தலைமை வகித்த அறிவிப்புகள் செய்தார்கள்.

### கோட்டைப்பட்டிணம் தர்கா சந்தனக்கூடு ஊர்வலம்

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டிணத்தில் ராவுத்தர் சாஹிபு வலியுல்லாஹ் தர்காவின் 396வது ஆண்டு கந்தூரி விழா சந்தனக்கூடு ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெற்றது.

மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பழைமை வாய்ந்த இந்த தர்காவின் கந்தூரி விழா இப்பகுதியில் பிரசித்திப்பெற்ற விழாவாகும்.

நிகழாண்டில் இந்த விழா கடந்த 16-ம் தேதி மஹாலிங்கம் பத்தர் குடும்பத்தினரின் முதல் மண்டகப் படியோடு தொடங்கியது. தொடர்ந்து 20-ம் தேதி கொடியேற்றத்துடன் ரத ஊர்வலம் நடைபெற்றது. புனித சந்தனக்கூடு வைபவம் சனிக்கிழமை இரவு தொடங்கியது.

வண்ண மின் விளக்குகளாலும் வண்ணப் பூக்களாலும் அலங்கரிக் கப்பட்ட சந்தனக்கூடு வாணவேடிக் கைகள் நடுவே ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3 மணி அளவில் ஊர் வலமாகப் புறப்பட்டது. அதிகாலை 5 மணிஅளவில் ஊர்வலம் தர்ஹாவை வந்தடைந்தது.

### மத நல்லிணக்கத்திற்கு உதாரணம் :

இந்த சந்தனக்கூடு ஊர்வலத்தில் சந்தனக்கூட்டுக்கு முன்னதாக தீவெட்டியை ஒரு சமூகத்தினர் எடுத்துச் செல்வர். மற்றொரு சமூகத்தினர் சந்தனக்கூட்டை இழுத்துச் செல்வர். இப்படியாக பல்வேறு சமூகத்தினரும் ஆயிரக் கணக்கில் சேர்ந்து பங்கேற்கும் விழா இது.

விழாவையொட்டி, மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

**நன்றி! தினமணி. தினமணி 01.02.2010.**

---

### மனித நேய பண்பாளர் தென் கச்சியருக்கு அஞ்சலி...!

மனித நேய பண்பாளர் தென்கச்சியார் அமரர் தென்கச்சி சாமிநாதன் அவர்களுக்கு அஞ்சலி!

இன்று ஒரு தகவல் மூலம் எல்லோரின் இதயங்களையும் கொள்ளை கொண்ட தென்கச்சி கோ. சுவாமிநாதன் 16.09.2009 அன்று மறைந்தார். உரை நடைத் தமிழுக்கு ஒரு புதிய திசையை அளித்தவர் தென் கச்சியார். மேடைத் தமிழின் ஆர்வப் போக்குகளையும், அடுக்கு மொழி அலங்காரப் பளபளப் புகளையும் புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிட்டு மக்களின் பேச்சுத் தமிழையே தம்முடைய மூச்சாக்கிக் கொண்டவர். தென் கச்சியார் பாணி எனப் புதிய தடம் பதித்தவர்.

குர்ஆனையும் ஹதீஸையும் புகழ்ந்து கூறுபவர்.

என்னதான் யாப்பிலக்கண அடிப்படையிலான தமிழ்க் காப்பியங் களைப் படித்துச் சுவைத்தாலும் கிராம த்து வயல்வெளிகளில் ஒலிக்கும் தெம் மாங்கின் சுகமே தனிதானே! அந்தச் சுகம் தான் தென்கச்சியாரின் பேச்சைக் கேட்டவர்களை எல்லாம் சொக்க வைத்தது. தகவல்களை திரட்டுவதே அவர்களின் பணியாக இருந்ததால் நிறைய இஸ்லாமிய நூட்களையும் படித்து வைத்திருந்தார். நபிகளாரின் வாழ்விலிருந்து பல நிகழ்வுகளை மேடைகளில் பேசியுள்ளார். தகவல் களிலும் அந்த நிகழ்வுகளை மேற்கோளாக சுட்டிக் காட்டுவார்.

திருக்குர்ஆன் அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். மனிதகுல ஒருமைப் பாடு பற்றிய குர்ஆனின் கருத்துக்களை அவருக்கே உரிய பாணியில் மிகச் சிறப்பாகவும், தெளிவாக வும் எடுத்துரைத்து பார்வையாளர்களின் இதயங்களை பனிமலராய் விரியச் செய்தார்.

தென்கச்சியார் மிகவும் எளிமையானவர். பந்தா எதுவும் இல்லாதவர். நீங்கள் சிலரைப் பார்த்திரு க்கலாம். சாதாரண நிகழ்ச்சிகளுக்குக் கூட கோட், கழுத்துப் பட்டை என மாட்டிக் கொண்டு வந்து நிற்பார்கள். அவர்களும் மூச்சுத் திணறி, நம்மையும் திணறடிப் பார்கள். ஆனால் எவ்வளவு பெரிய விழாவாக இருந்தாலும் அரைக்கைச் சட்டையுடன் நாலு முழ வேட்டியுட னும் வந்து அந்த விழாவுக்கே பெருமை சேர்த்து விடுவார் தென்கச்சியார்.

அந்த நல்ல மனிதரைப் பிரிந்து வாடும் அவருடைய குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்குகொள்கிறோம். அவருடைய அன்புத் துணைவியார் மகாலட்சுமி அம்மையாருக்கும், தென்கச் சியாரின் எழுத்துலக அன்பர்களுக்கும் இறைவன் அழகிய பொறுமையைத் தந்தருள இறைஞ்சுகிறோம்.

**நன்றி : சங்கமித்திரன்**
**தன் முன்னேற்றம்-அக்டோபர்2009**

# தர்கா இதழின் குறுகிய கால சுயசரிதை– கொஞ்சம் அறிவோமா?

மரியாதை மிகுந்த தர்கா இதழின் வாசப் பெருமக்களுக்கு தர்கா இதழ் குழுமத்தின் பணிவான சலாம்கள்...

தர்கா இதழ் தொடங்கி மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். நம் சிற்றிதழ் செல்லும் இடமெல்லாம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளதாகவே உணர்கிறோம். ஏனெனில் நமக்கு வரும் கடிதங்களும், தொடர்பு கொள்வோரும் நம் இதழை மற்றவருக்கு அறிமுகப்படுத்தியும், இன்னும் சில வாசகர்கள் ஒரு படி மேலே சென்று அவர்களே பல விலாசங்களைக் கொடுத்து தமது சொந்த செலவிலேயே பத்திரிக்கையை அனுப்பிவைக்குமாறு கூறி பணத்தை அனுப்பி வருகிறார்கள்.

உதாரணமாக இராமநாதபுரம். முஹ்யித்தீன் நேசர், ஆலி ஜனாப் செய்யிது அப்துல் காதர் அவர்கள் அப்படி செய்கிறார்கள் என்றால், பொள்ளாச்சியைச் சேர்ந்த ஆலி ஜனாப் முனவர் பாஷா அவர்கள் தமக்கு 200 இதழ்கள் கண்டிப்பாக அனுப்புங்கள் என்று வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இவரைப் போலவே ஆலி ஜனாப் அப்துர் ரஷீத் - சேலம், ஆலி ஜனாப் முயீனுத்தீன் - மதுரை, உடுமலைப் பேட்டை கரீம் பாஷா ஆகிய பலரும் இங்கு நினைவு கூறத்தக்கவர்கள்.

வஹ்ஹாபிகளின் இடைவிடாத தர்காவுக்குப் போகலாமா...? பாத்திஹா ஓதுவது பக்கா ஹதீஸ்களில் உள்ளதா...? என்ற ஊடகப் பிரச்சார காட்டு கத்தல்களைக் கேட்டு குழம்பிப் போய் நம்மவர்களில் சில அப்பாவி பொது ஜனங்கள் அவர்கள் ஹதீஸ் என்கிறார்களே! குர்ஆன் என்கிறார்களே! என கேட்க்கும் போது நமக்கு ஏற்படும் ஆதங்கத்தில் அவர்களை தெளிவுபடுத்த வஹ்ஹாபிகள் குர்ஆன் ஹதீஸ் பெயரில் செய்யும் பித்தலாட்டங்களை சொல்லி நாம் இது வரை செய்து வந்த மீலாது, மௌலூது, பாத்திஹா ஈஸாலே சவாபு எத்திவைத்தல் போன்ற அனைத்தும் நபி வழியே என விளக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.

மற்றபடி யாரையும் குத்திக் காட்டுவதிலோ குறை கூறுவதிலோ நமக்கு கிஞ்சிற்றும் எண்ணமில்லை. அல்லாஹ்வின் மீது பாரத்தை போட்டு, அவன் ரஸூலின் மீது ஈமான் விசுவாசம் கொண்டு, அவனது வலிமார்களின் பாசத்தை நெஞ்சில் சுமந்து எஜமான் தீன்தீன் முஹ்யித்தீன் ஆண்டகையின் அடிமைகளின் பாத கமலத் தூசிகளை தோளில் ஏந்தி தர்கா இதழை துவங்கி இந்த மூன்று வருடங்களில் பத்து இதழ்களையும், மூன்றாண்டு ஜன்த்ரிகளையும், கப்ருகளின் சட்டங்கள், சேமன்னி (ரொட்டி பாத்திஹா) புகழ் பூ அலிஷா பானிபட், இஸ்லாத்தில் புனித கொடிகள், ஆகிய நூட்களை வெளியிட்டுயிருக்கிறோம்.

துவக்கத்தில் தர்கா இதழ் சிறப்பாய் வெளிவர மூலராய் இருந்த ஆசிரியர் மர்ஹூம் சையத் முபாரக் அவர்களை இவ்வேளை நினைவு கூர்ந்து அவர்களின் மறுமை சிறக்க துஆ செய்து வாசகர்களாகிய நீங்களும் துஆ செய்ய வேண்டுகிறோம்.

அவர்களின் வழியொட்டி அவரது இளையமகனார் மௌலவி சையத் அஹ்மத் அவர்கள் தம் இளந்தோளில் தர்கா இதழின் சுமைகளை தாங்கி நடக்க... பணம், பொருள், பிரதிபலம் கருதாது இதழை நடத்த ஒத்துழைக்கும் அவர் குடும்பத்தார் மற்றும் ஜனாப் சையத் அப்துல் காதர் அஜீஸ் ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

இப்போது இதழுக்கு சட்டப் பூர்வமான அரசு அங்கீகாரம் கிடைத்து Reg No. TNTAM/2009/30120 அதன் எண் என்ற சந்தோஷ செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்த அங்கீகாரம் கிடைத்தை பெரிய கட்டுரையாக எழுதலாம். ஆனால் இடமின்மையை கருத்தில் கொண்டு முக்கியமாக தஞ்சையைச் சேர்ந்த ஆலி ஜனாப் அனீஸ் மோத்தி சேட், ஆலி ஜனாப் அப்துல் காதர் மோத்தி சேட், திரு.வேலு, திரு.பார்த்த சாரதி, திரு.கார்திகேயன், வரகூர் திரு. அசோகன், ஜனாப் சையத் கௌஸ் பாஷா, ஜனாப் A.தமீஜுத்தீன்.D.R.O (Retd), ஆகியோரும், சென்னையைச் சேர்ந்த திரு.பிளிக்ஸ், திரு.முருகேசன் T.N.E.B. ஆகியோரும், பிரதிபலன் எதிர்பாராது நமக்காக ஒத்துழைப்பு நல்கிய மற்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் நம்மால் ஏற்பட்ட சிரமத்திற்கு மன்னிப்பையும் வேண்டி அவர்கள் வாழ்வு சிறக்க அவர்களின் குடும்பத்தில் சந்தோஷமும், சுபிட்சமும் ஏற்பட தர்கா மஹான்களை வஸீலாவாக்கி வல்ல இறைவனிடம் பணிந்து வேண்டுகிறோம்.

அடுத்து, தர்கா இதழ் மூன்று மாதத்திற்கு ஒன்றாக வந்து கொண்டிருந்தது. அதற்கான காரணம் ஒன்று பொருளாதாரம், இரண்டு நமது அனுபவமின்மை. பல வாசகர்கள் மாத இதழாக மாற்றுங்கள் என கேட்டுக் கொண்டுள்ளார்கள். ஆனால் அவர்களின் எண்ணத்தை உடனடியாக பூர்த்திசெய்ய முடியாவிட்டாலும் தர்கா இதழ் வாசகர் வட்ட கூட்டத்தில் ஆலி ஜனாப் ஹாரூன் பாஷா, ஆலி ஜனாப் சலீம் பாஷா அவர்கள் சென்ன கருத்தின் பேரில் தற்சமயம் ஒவ்வொரு அடியாக எடுத்து முன்னேறுவதே சிறந்தது என்பதால் இந்த இதழுடன் இருமாத இதழாக வெளியிட இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பலர் சந்தா விபரத்தை தெரியப்படுத்துமாறு நம்மை அடிக்கடி கேட்ட வண்ணமிருந்தனர். அவர்கள் கொடுக்கும் நன்கொடைகள் குறிப்பாக ஆலி ஜனாப் இஸ்மாயீல் நண்பர் குழாம் மற்றும் எல்லோருமாக அவர்களாகவே முன்வந்து நல்கும் வளர்ச்சி நிதியையும் பாக்கிக்காக நாமே நம்மால் ஆனதை போட்டு நடத்தி வந்தோம்.

இந்த இதழிலிருந்து அதிகாரப் பூர்வமாக இதழ் ஒன்றிற்கு ரூ5/-எனவும் ஆண்டு முழுவதும் 6 இதழ்களுடன், தர்கா ஜன்த்ரியும், அஞ்சல் செலவுகள் உட்பட ரூ50/- வருட சந்தாவாகவும் நிர்ணயித்து தர்கா இதழ் வாசகர் கூட்ட முடிவின் படி அறிவிப்பு செய்கிறோம்.

தர்கா இதழின் அத்தனை நிறைகளும் வாசகர்களாகிய உங்களுக்கும், அதன் வளர்ச்சிக்கு உதவி செய்யும் நண்பர்களுக்கும் உரித்தானது.

குறைகள் அனைத்தும் எங்களைச் சார்ந்தது என்று நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

தொடர்பு கொள்ள விரும்புவோர் உங்கள் ஆலோசனைகளையும், அதிருப்திகளையும், நிறைகுறைகளையும் ஒரு அஞ்சல் அட்டையில் சுட்டிக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

மறுபடியும் நாம் சொல்ல வருவது என்னவென்றால் எங்கள் எழுத்தில் வெளிப்படும் வேகம், ஆத்திரம், கோபம் போன்ற அனைத்தும் யார் மனதையும் வேண்டுமென்றே புண் படுத்தும் நோக்கத்தில் வருவதல்ல, மாறாக அஹ்லே பைத்துக்களையும், அவுலியாக்களையும், இமாம்களையும், இறைநேசச் செல்வர்களின் தர்காக்களை நாடி வரும் அப்பாவி பொது மக்களையும் தாறுமாறாக தரக்குறைவாக கூறுகிறார்களே என்ற ஆதங்கத்தில் வெளிப்படுவதே.

தவறுகளுக்கு மன்னிப்பை வேண்டி உங்கள் கருத்துக்களை எதிர் பார்த்து விடைபெறுகிறோம்....

நன்றி...! வஸ்ஸலாம்...!

**இப்படிக்கு,**
**தர்கா நிர்வாகம்**

**காண வேண்டிய சுன்னத் வல் ஜமாஅத் வலைதளங்கள் வாசகர் பார்வைக்கு...**

www.aulia-e-hind.com
www.kgn786.com
www.sayedalimiradatar.com
www.silsila-e-rehmani.com
www.gilani.com.pk



# இறந்தோருக்கு 3,7,10,40 பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல் - ஓர் ஆய்வு

(கண்ணியமிகு ஃபழீலத்துஷ் ஷைகு அஸ் ஸையத் அப்துல் அஜீஸ் மௌலானா குஷ்ஹால் ஹஜ்ரத் அவர்கள்)

**பத்தாம் நாளும் அதன் மகிமைகளும்:**

நமது முன்னோர்கள், ஒருவர் இறந்து போனால் அவர் இறந்து மூன்றாம் நாள், ஏழாம் நாள் அன்று செய்வதைப் போன்று பத்தாம் நாளன்றும் அண்டை வீட்டாரையும் உறவினர்களையும் அழைத்து நற்காரியங்கள் பல புரிந்து அவரது பெயரால் ஈஸால் சவாபும் செய்து வருகின்றனர். அதைத் தொடர்ந்து இந்நற்காரியத்தை நாமும் செய்து வருகிறோம்.

மார்க்கத்தை மர்மக்கதையாக எண்ணிக் கொண்டிருக்கும் சிலர் இப்படிச் செய்வதை கண்மூடித்தனமாக விமர்சிப்பதால் மூன்றாம் மற்றும் ஏழாம் நாளில் இவ்வாறு செய்வதற்கு ஒன்றிரண்டல்ல பல்வேறு ஆதாரங்களை குர்ஆன் ஹதீஸைக் கொண்டு மட்டும் ஆதாரப்படுத்திக் காட்டிய நாம் இப்போது பத்தாம் நாளுக்குரிய ஆதாரங்களையும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

(1) ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்வாராயின் அவருக்கு அது போன்று பத்துப்பங்கு (நன்மை) உண்டு.

**சூரா -அன்ஆம், வசனம் -160**

(2) விடியற்காலையின் மீது சத்தியமாக. பத்து இரவுகளின் மீது ஆணையாக. **சூரா -பஜ்ர், வசனம் -1,2.**

(3) நபியே! நீர் முஃமின்களைப் போருக்கு ஆர்வமூட்டுவீராக உங்களில் பொறுமையுடையோர் இருபது பேர் இருந்தால் அவர்கள் இருநூறு நபர்களை வெற்றி கொள்வார்கள். இன்னும் உங்களில் நூறு பேர்கள் இருந்தால் அவர்கள் காபிர்களில் ஆயிரம் நபர்களை வெற்றி கொள்வார்கள். ஏனெனில் (விசுவாசிகளை எதிர்ப்போர்) அவர்கள் நிச்சயமாக அறிவில்லாதவர்களாக இருப்பது தான். (காரணமாகும்)

**சூரா- அன்பால், வசனம் - 65**

இவ்வசனத்தில் விசுவாசிகளான முஃமின்களுடைய பலத்தை இருபதுக்கு இருநூறு என்றும், நூறுக்கு ஆயிரம் என்றும் பத்து என்னும் எண்ணில் பெருக்கிக் கூறப்பட்டுள்ளதை வாசிப்போர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருக் குர்ஆனை ஓதிக்காட்டி ஜனங்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருந்த போது பொறாமை பிடித்த காபிர்களில் சிலர் இவர் தான் இப்படி நவீனமான ஒன்றை உருவாக்குகிறார் என்று கூறிய போது, அதற்கு பதிலளிக்கும் வகையில் இறைவன் திருமறையில்...

(4) அவ்வாறாயின் இதைப் போன்றதொரு (கற்பனையால் புனையப்பட்ட) பத்து சூறாக்களை கொண்டு வரச் சொல்லுங்கள் என்றான்.

**சூரா - ஹூத், வசனம் 13.**

(5) அல்லாஹுத்தஆலா தனது வேதத்தில் 1. காடை, 2. ஈ, 3. பேன், 4. தேனீ, 5. சிலந்தி, 6. வெட்டுக்கிளி, 7. மரங்கொத்தி, 8. காக்கை, 9. அபாபீல், 10. எறும்பு என பத்து வகைப்பட்ட ஜீவ ஜந்துக்களைப்பற்றி கூறியுள்ளான்.

**இமாம் சுயூத்தி ரஹிமஹுமுல்லாஹ்**

(6) இறுதி கடமையான புனித மிகு ஹஜ்ஜையும், அதன் ஈகைத் திருநாளையும் துல் ஹஜ் பிறை பத்தாம் நாளன்று அல்லாஹ் நிறைவேற்ற செய்துள்ளான். **நபிமொழி.**

(7) உங்களின் பிள்ளைகள் பத்து வயதை அடைந்தால் அவர்களை தொழுகைக்கு அடித்து கட்டளை யிடுங்கள். இன்னும் படுக்கையை விட்டும் அவர்களை தூரமாக்கி வையுங்கள் - **நபிமொழி.**

(8) அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹு வ ஸல்லம் அவர்களால் சுவர்க்கத்தைக் கொண்டு சுபச் செய்தி கொடுக்கப்பட்டவர்கள் பத்து தோழர் பெருமக்களாவர்.

இப்படி இன்னும் எவ்வளவோ ஆதாரங்களை ஒன்றன் பின் ஒன்றாக உங்களுக்கு நாம் எடுத்துக் காட்ட முடியும். ஆகையால் வீணான விதண்டாவாதம் பேசித் திரியாது நமது முன்னோர்கள் நமக்கு அமைத்துத் தந்தவைகளில் எதுவுமே ஆதாரமில்லாதவைகள் அல்ல என்பதை புரிந்து கொள்வதோடு நமது முன்னோர்கள் நமக்கு நல்லவைகளை தான் நடைமுறைபடுத்தித் தந்துள்ளார்கள் என்பதை நம்புவீர்களாக.

(ஆதாரம் - எத்திவைப்போம் வாரீர், பக் : 68)

இன்ஷா அல்லாஹ்! இனி அடுத்த இதழில் நாற்பதாம் நாளுக்குரிய மகிமைகளையும், அதன் சிறப்புகளையும் காண்போம்.

19 ஆம் பக்க தொடர்ச்சி

கொள்கின்றனர். அல்லாஹ்வையே வணங்குகின்றனர். இதுதான் நடைமுறை உண்மையாகும்.

நாம் வலிமார்களை வணங்குவதாகக் கருதி நம் மீது குற்றம் சுமத்துவதைக் கொண்டு வலிமார்கள் மீது இந்த வழிகேடர்கள் கொண்டுள்ள பொறாமையை வெளிப்படுத்துகிறது.

எனவே எவ்வகையில் பார்த்தாலும் இந்த வழிகேடர்கள் நம்மை குழப்பத்தில் ஆழ்த்தவே முடிவுசெய்து செயல்படுவதால் இவர்களின் வார்த்தைகளை விட்டும், தவறான கொள்கைகளை விட்டும் விலகி இருப்பது முஸ்லிம்கள் மீது கட்டாயக் கடமையாகும்.

காரணம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொன் மொழியைக் கேளுங்கள். கெட்ட கொள்கைகாரர்களை உங்களிடம் வர விடாதீர்கள். (அவ்வாறானால் தான்) உங்களை அவர்கள் வழிகெடுக்க மாட்டார்கள். குழப்பத்திலாழ்த்த மாட்டார்கள்.

**(முஸ்லிம் ஷரீஃப்)**

எனவே அவர்களை விட்டும் நாம் விலகி இருப்பதோடு நம் குடும்பத்தினர்களையும் பாதுகாக்க வேண்டும்.

யாரை வலியுல்லாஹ்வாக ஏற்பது...?

**தெளிவடைவோம்..**

# மஜ்லிஸ் உலமாயி அஹ்லுஸ்ஸுன்னத்தி வல் ஜமாஅத் - செயற்குழு கூட்டம்

கடந்த ஹிஜ்ரி 1431 ஸபர் பிறை 8க்கு சரியான ஈஸவி 2010 ஜனவரி 24 ஞாயிற்றுக் கிழமை, மதுரை மேலூர் நெடுஞ்சாலை கத்தப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அல் ஜாமிஅத்துல் கௌஸுல் வரா அரபிக் கல்லூரி வளாகத்தில் உள்ள மஸ்ஜிதே ஜுலைகாவின் மேற்படி செயற்குழு கூட்டம் S.M.H.மௌலானா மௌலவி முஹம்மத் அலி சைபுத்தீன் ஆலிம் சூபி ஹஜ்ரத் அவர்கள் தலைமை ஏற்க கௌஸுல் வரா மாணவர்களின் கிராத் மற்றும் நதே ஷரீபுடன் இனிதே துவங்கியது.

**தமிழ் நாடு மஜ்லிஸ் உலமாயி அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தின் தீர்மானங்கள்:**

1. மதரஸா நலவாரியம் அமைத்தல் பற்றி சாதக பாதகங்களை சரிவர பரிசீலனை செய்து பின்னர் அறிவிக்கப் படும் என தீர்மானிக்கப்பட்டது.

2. சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு மாற்றமாக நடந்து வரும் நமது உறுப்பினர்கள் தாங்களா கவே நமது மஜ்லிஸிலிருந்து நீங்கிவிட்ட தாக கருதப்படுவார்கள்.

3. இஸ்லாம் என்ற பெயர் தாங்கிய வழிகெட்ட பல கூட்டங்களின் அமல் களை முற்படுத்தி ஈமானைப் பிற்படுத்து வதை நமது மஜ்லிஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

4. இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் திருமணப் பதிவு உள்பட மத்திய மாநில அரசுகள் எந்தவித தலையீடும் செய்யக் கூடாது என இச்சபை கேட்டுக் கொள்கிறது.

அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திட்ட மதுரை கௌஸியா பவுண்டேஷன் தலைவர் : ஆலி ஜனாப் முஹம்மத் அஷ்ரப் சேட், பொருளாளர் : ஆலி ஜனாப் ஹாஜி ஆதம் படேல் , மற்றும் நிர்வாக அலுவலர்கள் அனைவருக்கும் உலமா சபை தன் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்தது.

# பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் தூய முஃமின்களே...!

**என்னுரை...**

எங்கும் நிறைந்திலங்கும் வல்லவனாம் அல்லாஹ்வைப் போற்றி புகழ்ந்தவனாகவும், பரிசுத்தத்திலும் பரிசுத்தமான வமிசா வழியில் உயர் குலத்தில் தோன்றிய உத்தமராம் ஹபீப் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் பரிசுத்த குடும்பத்தார்கள், உற்ற தோழர்கள், அவர்களை அனுவளவும் பிசகாமல் நடந்த இறைநேசச் செல்வர்கள், மஷாயிகுமார்கள் மற்றும் ஸாலிஹீன்கள் ரலியல்லாஹு அன்ஹும் அனைவர்கள் மீதும் என்றென்றும் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக! ஆமீன்.

இஸ்லாத்தை மக்களுக்கு போதித்து மக்களை நேர்வழிப்படுத்திட வல்ல அல்லாஹ் ரஸூல்மார்களையும், நபிமார்களையும், இவ்வுலகிற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தான். அவ்வாறு அவன் தேர்ந்தெடுக்கும் போது அவர்களின் வமிசங்கள், குலங்களை சுத்தமானதாகவும், உயர்வானதாகவும் அமைத்து அதிலிருந்தே அவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

இவ்வுலகில் தோன்றிய நபிமார்கள், ரஸூல்மார்கள் தங்கள் தூதுத்துவத்தை தங்கள் சமூகத்தாரிடம் எடுத்துரைத்த போது, அந்த சமூகத்தாரில் அந்த கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டு ஈமான் கொண்டவர்கள், அதை மறுத்து காபிராகிப் போனவர்கள் என்று இரு கூட்டத்தினர் இருந்தனர். நபிமார்களின் கொள்கையை மறுத்தவர்கள் அந்த அந்த கொள்கையை மறுத்து நடந்தார்களே தவிர, அந்த நபிமார்களையும், அவரின் வமிசத்தையும் தரக்குரைவாக இழிவுபடுத்தியதாகவும் எங்கும் காணக் கிடைக்கவில்லை.

ஆனால் நமது முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உம்மத்தில் முனாபிக்குகள் எனும் நயவஞ்சகர்கள் தோன்றி தங்களது நபியைப் பற்றி தரக்குறைவாகவும், அவர்கள் வமிசத்தையும், அவர்கள் தாய் தந்தையரைப் பற்றியும் மிகவும் தரக்குறைவாக பேசியும், எழுதியும் வருகின்றனர்.

இந்த முனாபிக்குகளின் வழி வந்த வழிகேடர்களான இப்னு தைமிய்யா போன்றோரும், அவனைப் பின்பற்றி நடப்பவர்களும் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் தாய், தந்தையர் முஃமினானவர் அல்லர். காபிர்கள் என்று பொய் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால், இவ்வுலகில் தோன்றிய ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்கள் அனைவர்களும் பரிசுத்தமானவர்களே! முஃமினான தாய், தந்தைக்குப் பிறந்தவர்களே! இது தான் சுன்னத் வல் ஜமாஅத்தினர்களின் உறுதியான கொள்கையாகும்.

இதற்கு ஆதாரமாக நமது சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடைய மார்க்க அறிஞர்கள், பெருமானார் அவர்களின் பெற்றோர்கள் முஃமினானவர்கள் தான் என்று குர்ஆன், ஹதீஸ்களிலிருந்து ஆதாரங்களோடு நூட்களை வெளியிட்டுள்ளனர். அதிலிருந்து மக்கள் தெளிவாக விளங்கும் வண்ணம் இப்பகுதியில் பெருமானாரின் பெற்றோர் முஃமின்கள் என்பதற்கு ஆதாரங்களையும், பின் வழிகேடர்களான முனாபிக்குகள் தொடுக்கும் ஆட்சேபனைகளுக்கு தெளிவான பதில்களும் காண்போம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் நபிகள் நாயத்தின் மீதான நேசம் மென்மேலும் சிறந்தோங்க துணைபுரிவானாக! ஆமீன்.

*01.01.2010* **இவண்,**

**ஷைகுமார்களின் ஊழியன்**

**குளம் ஜமால் முஹம்மது.**

---

அல்லாஹு சுப்ஹானஹுத் தஆலா மக்களை நல்வழி படுத்துவதற்காக ரஸூல்மார்களையும், நபிமார்களையும் இவ்வுலகிற்கு அனுப்பி வந்துள்ளான். நபிமார்கள் அனுப்பப் படாத சமூகமே இவ்வுலகில் இல்லை என்று அல்லாஹ் தனது திருமறையில் கூறியுள்ளான். ஆனால், நபிமார்களின் வருகைகளுக்கு மத்தியில் கால வேறுபாடுகள் அதிகரிக்கும் போது அந்தந்த சமூகத்தார்கள் சத்திய மார்க்கத்தைப் பற்றி அறியாத அளவிற்கு சென்று விடுகின்றனர். சத்திய மார்க்கம் இதுவென்று அறியப்படாத கால கட்டத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றி நமது மார்க்கம் என்ன சொல்கிறது என்று விரிவாக அலசிப் பார்த்தால் உண்மைகள் விளங்கத் தொடங்கும்.

**ஃபத்ரத் காலம் :-**

சத்திய சன்மார்க்கம் எதுவென்று அறியப்படாத காலத்தையே இது குறிக்கும். இதில் வாழ்ந்தவர்களை நமது மார்க்க அறிஞர்கள் மூன்று வகையினராக பிரிக்கிறார்கள்.

**1. இறைவனுக்கு இணை வைக்காமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்கள்**

இவர்களில் சிலர் முன்பிருந்த மார்க்கத்தில் தங்களை இணைத்திருக்க மாட்டார்கள். உதாரணமாக குஸ் இப்னு சாயிதா. ஜைத் இப்னு அம்ர் இப்னு நுஃபல்.

**மார்க்கத் தீர்ப்பு :-**

இவர்கள் மறுமையில் தனி சமூகமாக எழுப்பப்படுவார்கள்.

நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நிச்சயமாக ஜைத் இப்னு அம்ர் என்பவர் மறுமைய நாளில் தனி சமூகமாக எழுப்பப்படுவார் என்று சொன்னார்கள்.

**அறிவிப்பாளர் : ஹஜ்ரத் சயீத் இப்னு ஜைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். நூல் அஹ்மது, ஹாகிம், தப்ரானி (கபீர்)**

மேலும் பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எனும் கிரந்தத்தில் குஸ் இப்னு சாயிதாவை சிறந்தவர் என்று நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ்கள் இதற்கு சான்றாக உள்ளது.

முன்பிருந்த மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். உதாரணமாக : நஜ்ரான் வாசிகள், வரகத் இப்னு நௌபல், உஸ்மான் இப்னு ஹுவய்ரிஃத் போன்றோர்...

சைய்யிதத்தினா கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வரகத் இப்னு நௌபல் அவர்களின் மறுமை நிலை பற்றி இறைத்தூதர் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கேட்டபோது...

வெண்ணிற ஆடை அணிந்தவராக கனவில் அவரை நான் கண்டேன். அவர் நரகவாசியாக இருந்திருந்தால் வெண்மை ஆடை அவரிடம் காணப்பட்டிருக்காது என்றார்கள்.

**அறிவிப்பாளர் : ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்.**

பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு வஹீ வந்த போது ஏற்பட்ட நிலையைப் பற்றி அன்னை கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தங்கள் உறவினரான வரகத் இப்னு நௌபல் அவர்களிடம் கேட்ட போது, முந்தைய வேதங்களில் கூறப்பட்டிருக்கும் நபி இவர் தான் என்று கூறி அவர்களுக்கு முன்னறிவிப்பு செய்தார்.

**மார்க்கத் தீர்ப்பு :**

இந்த கூட்டத்தினர் மறுமையில் முன்பிருந்த மார்க்கத்தை சார்தோராக கருதப்பட்டு அம்மார்க்கத்திற்குரிய சட்டதிட்டங்கள் படி தீர்ப்பளிக்கப்படுவார்கள்.

இனி ஏகத்துவத்தைப் புறக்கணித்து இணை வைப்பில் ஈடுபட்டவர்கள் யார் என்பதையும், அவர்களின் நிலையையும் அடுத்த இதழில் காண்போம்.

**ஆக்கம் :குளம் ஜமால் முஹம்மது**



# علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை

உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி கூ.பி

## யாரை வலியாக ஏற்பது...?

ஒருவரை வலியாக ஏற்பது என்பதைக் குறித்து குர்ஆன் நான்கு விதமான விளக்கங்களை நமக்கு கற்றுக் கொடுக்கிறது. இந்த விளக்கங்களைக் குறித்து நாம் தெளிவு பெற்றால் தான் நமது ஈமானை வழிகேடர்களின் தவறான விளக்கத்திலிருந்து பாதுகாக்க முடியும், காரணம் அஹ்லெ சுன்னத் ஜமாஅத்தினைத் தவிர மற்ற எல்லா வழிகெட்ட கூட்டங்களும் இறையருள் பெற்ற வலிமார்களின் விஷயத்தில் எதிராக ஒன்றுகூடி உள்ளார்கள். எப்படியாவது உம்மத்தே முஹம்மதியாவான நம்மை இறைவனின் அருளில் இருந்து விலக்கி அழிவின் பாதைக்கு நம்மை அழைத்து செல்வதில் கைகோர்த்து உள்ளார்கள். எவர் அல்லாஹ்வின் ரகசியமான வலியுல் லாஹ்வின் சகவாசத்தில் இருக்கிறாரோ அவர் மீது இறைவனின் அருள் என்றும் நிலைத்திருக்கும். அல்லாஹ்வின் அருள் எவர்மீது பூரணமாய் இருக்குமோ அவரின் உள்ளத்தில் மட்டுமே வலியுல்லாஹ்வின் மீது அன்பு ஏற்படும் என்பதை வாசகர்கள் என்றும் மறந்துவிட வேண்டாம்.

குர்ஆனின் வசனத்தைக் கொண்டே இந்த வழிகேடர்களான தேவ்பந்திகள், தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்து போன்ற அமைப்பினர் நமமை குழப்பி நமது ஈமானை கேள்விக்குறியாக்குவதால் குர்ஆனின் தெளிவுகளை நீங்கள் நன்கு புரிந்து கொள்வது அவசியமாகிறது. கீழே நாம் விவரிக்கும் விஷயங்களை ஒன்றிற்கு இரண்டு முறை படித்து மனதில் நிறுத்தவும்.

வாருங்கள்! குர்ஆன் கூறும் வலி எனும் பதத்திற்கு உண்டான விளக்கத்தை காண்போம். யாரை வலியாக ஏற்க வேண்டும், யாரை வலியாக ஏற்கக் கூடாது என்ற தெளிவுகளைக் காணுங்கள்.

### முதல் வகை:–

**இறைவன் பலகீனமானவன். அவனால் உதவி செய்ய இயலாது என்று எண்ணி மற்றவர்களிடம் உதவி தேடுதல்.**

இவ்வாறு உதவிதேடுதல் குப்ராகவும், ஷிர்காகவும் உள்ளது. எனவே இவ்வாறு நினைத்து மற்றவரிடம் உதவிதேடக் கூடாது.

அல்லாஹ் கூறுகிறான்! பலகீனத்தின் காரணமாக அல்லாஹ் விற்கு உதவுபவர் எவருமில்லை. மேலும் அவனது பெருமையை தக்பீர் செய்வீராக.

மேற்கண்ட தவறான எண்ணத் துடன் எந்த ஒரு முஸ்லிமும் இறைவ னுக்கு மாறாக ஒரு வலியுல்லாஹ்வின் தர்பாருக்கு செல்வதில்லை. ஆனால் இந்த வழிகேடர்களான தேவ்பந்திய தப்லீக்வாதிகள். நஜ்திகள், ஜமாஅத்தே இஸ்லாமியர்கள் அப்பாவி பொது மக்களை வழிகெடுக்கும் நோக்கில் இறைவனை நாம் பலகீனமானவனாகக் கருதுவதாக அபாண்டமாக பழிசுமத்தி நமது பரிசுத்த ஈமானை அசுத்தப் படுத்துகின்றனர். இவர்களின் அபாண்ட மான குற்றச்சாட்டை மடையர்கள் கூட ஏற்பதற்கில்லை. ஆனால் இந்த வழி கேடர்கள் மேற்கண்டவாறு கருதுவதால் இவர்கள் தான் முஷ்ரிக்குகள், காபிர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

### இரண்டாம் வகை:–

**இறைவனுக்கு இணையாக உதவி செய்பவர்கள் எனக் கருதுவது.**

இறைவன் கூறுகிறான்! பூமியில் இக்காபிர்கள் இறைவனை இயலாமையில் ஆழ்த்த முடியாது. அல்லாஹ்விற்கு நிகராக இவர்களுக்கு உதவுபவர் யாரும் இல்லை.

இறைவனுக்கு இணையாக எந்த ஒரு வலியுல்லாஹ்வையும் எந்த ஒரு முஸ்லீமும் கருதுவது இல்லை. மாறாக வலியுல்லாஹ் என்போரை இறைவனின் அருள் பெற்ற நல்லடியாராகவே காண்கிறார்கள் என்பது வெளிப் படையான உண்மை. இந்த வழி கேடர்கள் பொது மக்களான அப்பாவி முஸ்லிம்கள் வலியுல்லாஹ்வை இறைவனாக கருதுவதாக பழிசுமத்து கின்றனர். உண்மையில் இந்த வழிகேடர்கள் வலியுல்லாஹ்வை அல்லாஹ்விற்கு இணையாக கருதுகின்ற னர். எனவேதான் அப்பாவி மக்கள் மீது இந்த குற்றச்சாட்டை சுமத்துகின்றனர். மேற்கண்டவாறு இறைவனுக்கு இணை யாக இந்த வழி கெட்ட அமைப்பினர் கருதுவதால் இவர்கள்தான் காபிர்களும், முஷ்ரிக்குகளுமாவார்கள்.

எனவே இவர்களை விட்டும் ஒதுங்கி இருப்பது முஸ்லிம்களின் கட்டாயக் கடமையாகும்.

வலியுல்லாஹ்க்கள் இறைவனின் விருப்பத்திற்கு மாறாக எந்த ஒரு காரியத்தையும் செய்வதில்லை. இறைவனின் அருளை வெளிப்படுத்தும் மள்ஹராக-வெளியீட்டும் ஸ்தலமாக உள்ளார்கள். இறைவனுக்கு இணை யாரும் இல்லை. இணை உண்டாவது என்பது எப்போதும் சாத்தியமற்ற ஒன்றாகும். காரணம் இறைவனுக்கு உருவம் இல்லாத போது எப்படி அவனுக்கு இணை எற்படுத்த இயலும்? மனிதனில் வெளிப்படும் ஆற்றல் அனைத்தும் இறைவன் மனிதனுக்கு அளித்த ஆற்றல். இதனை வெளிப்படுத்துவதால் அது இறைவனின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதே அன்றி இறைவனுக்கு நிகர் இல்லை.

எனவே எப்போதும், யாராலும் இறைவனுக்கு இணை ஏற்படுத்த இயலாது என்பதை வாசகர்களாகிய நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட கருத்துக்கு மாறாக இந்த வழிகேடர்கள் இறைவனுக்கு இணை ஏற்படுகிறது என்று கூறுவதால் இவர்களாகவே இறைவனுக்கு உருவத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது. இறைவனுக்கு உருவம் ஏற்படுத்திய இவர்கள் முஸ்லிம்களா? காபிர்களா? என்பதை முஸ்லிம்களே நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

### மூன்றாவது வகை:–

**எவரையாவது உதவி செய்பவர் என்று கருதி அவரை வணங்குவது. அதாவது வலி என்னும் பதத்திற்கு வணக்கத்திற்குரியவர் என அர்த்தம் வைப்பது.**

இறைவன் கூறுகிறான் அல்லாஹ்வை அன்றி மற்றதை வலியாக ஆக்கிக் கொண்டோர் கூறுகின்றனர். இவைகள் அல்லாஹ்வின் பால் எங்களை நெருக்கி வைக்கும் என்பதற்காகவே தவிர இவைகளை நாங்கள் வணங்கவில்லை.

இவ்வசனத்தில் வலி என்பதன் பொருள் வணக்கத்திற்குரியவர் கடவுள் என்பதாகும்.

மேற்கண்ட வசனம் காபிர்களை குறித்து இறக்கப்பட்ட வசனமாகும். இந்த வசனத்தை முஸ்லிம்கள் மீது இந்த வழிகேடர்கள் திணிப்பது எவ்வளவு பெரிய மோசடித்தனம். காரணம் எந்த ஒரு முஸ்லிமும் வலியுல்லாஹ்க்களை இறைவனிடம் சேர்க்கும் கடவுளாக கருதுவதில்லை.

இறைவனின் ரகஸியத்தை வெளிப்படுத்தும் வழிகாட்டிகளாகவே கருதுகின்றனர். இதனால் தான் வலி யுல்லாஹ்க்கள் காட்டித் தரும் தரீக்கா வில் தன்னை இணைத்து மனதை பக்குவப்படுத்தும் பயிற்சிகளில் தன்னை இணைத்து ஈடுபடுத்தி மேன்மக்களாக ஆகுவதற்காக வேண்டியே வலிமார் களை தங்களின் வழிகாட்டிகளாக ஏற்றுக்

தொடர்ச்சி 17ஆம் பக்கம் பார்க்க

# வாசகர் மன்றம்.....

மதிப்பிற்குரிய தர்கா இதழ் ஆசிரியர் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ...

முஹர்ரம் மாத இதழை படித்தேன். மிக்க மகிழ்ச்சி. குழப்பவாதிகளையும், வஹ்ஹாபிகளையும் அழிக்கும் போர் வாளாகவும், முரீத், கிலாபத், தரீகத் என்னும் போர்வையில் மறைந்துள்ள விஷக்கிருமிகளை ஒடுக்கும் ஜூல்பிக்காராகவும், நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று பறை சாற்றி வீர நடைபோட்டுக் கொண்டிருக்கும் தர்கா இதழ் தர்கா குழுமம் கியாமத் நாள் வரை நீடூடி வாழ குல் அன்பியா, குல் அவ்லியா அவர்களின் பொருட்டால் வல்ல இறைவன் அருள் புரிவானாக! ஆமீன் பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்!!

என் புதிய விலாசத்திற்கு தர்கா இதழையும் ஜன்திரியையும் அனுப்பி வைக்கவும், நான் எழுதி அனுப்பிய இரண்டு வலிமார்களின் உருஸ் தினங் களை ஜன்திரியில் சேர்த்துக் கொண்ட மைக்காக மிக்க நன்றி! வஸ்ஸலாம்!

**S.அஜ்மல், சேலம் 21.01.2010**

தங்களுடைய தர்கா பத்திரிக்கை கிடைத்தது. மிக்க சந்தோஷம்! முக்கியம் சாத்தான் குடியைச் சார்ந்த அப்துர் ரவூப் மௌலவி அவர்களின் கட்டுரை இதில் இடம் பெற்றிருந்தது கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். இந்த மௌலவி மிகவும் குழப்பவாதியான ஒருவர். ஞான விஷயங்களை தன் மனம் போக்கில் சொல்லி அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு என்றும் இன்னும் குப்ரான விஷயங்களையும் எடுத்தோதி வந்திருக்கிறார். ஷைகுனா ஸூபி ஹஜ்ரத் அவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர். இலங்கையிலிருந்து அடித்துவிரட்டப் பட்டவர். ஷைகுனா ஸூபி ஹஜ்ரத் அவர்களின் கலீபா பூக்கோயா தங்கள் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் பைஅத் கொடுக்கும் போது ரவூப் மௌலவியிடம் தொடர்பு வைக்க கூடாது என்று நிபந்தனை விதித்தே பைஅத் கொடுத்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இத்துடன் ஒரு கட்டுரை அனுப்பியுள்ளேன். பிரசுரிக்க வேண்டுகிறேன்.

**20.01.2010.காயல் பட்டிணம் குளம் ஜமால் முஹம்மது.**

**(தவறுக்கு வருந்துகிறோம். சுட்டிக் காட்டியமைக்கு நன்றி! -ஆசிரியர்)**

அஸ்ஸலாமு அலைக்கும்...

தங்களின் சென்ற ஜனவரி 2010 தர்கா இதழை பார்த்தேன். அதில் வந்திருக்கிற யா கௌஸ்...! யா முஹ்யித்தீன்...! கண்மணி நாயகத்தின் மீலாதும் மௌலூதும்...! என்ற கட்டுரை பார்த்தேன். அதை எழுதியவர் முஹ்யித்தீன் அடிமை என்றிருந்து. இவர் கட்டுரை ஹதீஸ்களுக்கு மாற்றமாக இருக்கிறது. தர்கா இதழ் 5,6 பக்கங்களில் ஸல்லல்லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் பிறந்த செய்தியைக் கேள்விப்பட்ட அபூ லஹப் தன் பெருவிரலை நீட்டி நன்றி! மகிழ்ச்சி! என்று மட்டும் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால் புகாரி ஷரீபில் வருகிறது, நாயகம் பிறந்தவுடன் அச்செய்தியை சொன்ன அடிமைப் பெண்ணை மகிழ்ச்சியினால் தன் ஆட்காட்டி விரலை நீட்டி நீ விடுதலை என்று சொல்லி விடுதலை செய்தான் என்றும், அதனால் நரகத்தில் திங்கட்கிழமை தோறும் அவனுக்கு அவ்விரலிலிருந்து அமுதம் சுரந்து அதன் மூலம் தாகம் தீர்த்து கொள்கிறான் என்றும் இருக்கிறது. பாவா அப்துல்லாஹ் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் மீது அந்தக் குடும்பத்தினர் அனைவரும் பாசம் வைத்திருந்தனர் என்பதும், அதனால் அவர்கள் நாயகம் பிறந்தவுடன் மகிழ்ச்சி கொண்டனர் என்பதும் வரலாற்று உண்மை. தாங்கள் அதை திருத்தி வெளியிட வேண்டுகிறேன். வஸ்ஸலாம்! **காயல் -குளம் ஜமால் முஹம்மது. 09.02.2010**

நாரயே தக்பீர்! அல்லாஹூ அக்பர்!!

நாரயே ரிஸாலத்! யா ரஹூலல்லாஹ்!!

யா அலி தூல்ஹா! ஹஸேன்!! ஹூஸேன்!!

யா கௌஸ்! அல் மதத்!!

பேரன்புடையீர்...! அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ.

ஜனவரி 2010 இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. தர்கா இதழ் கிடைக்கும் பொழுது அளவில்லா மகிழ்ச்சி ஏற்படும். அந்த மகிழ்ச்சி எப்படிப்பட்டது என்றால் ரமலான் மாதம் பிறை பார்க்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி போன்றது ஆகும்.

ஒவ்வொரு முறையும் தர்கா இதழ் வந்து விட்டது என்று தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா கோம்பூர் ஆஸ்தானே காதிரிய்யா சையத் பீர் தில்தார் அலிஷா பாவா தர்கா ஷரீஃபின் கலீஃபா பிஸ்மில்லாஹ் அலிஷா பாவா அவர்கள் எனக்கு தகவல் தெரிவிப்பார்கள். அவர்களிடமிருந்து மூன்று இதழ்கள் பெற்றுக் கொள்வேன். ஒன்று எனக்காக மற்ற இரண்டு இதழ்கள் நண்பர்களுக்கு இலவசமாக படிக்க கொடுத்து உண்மையான செய்தி தருவது தர்கா இதழ் எனக் கூறி படிக்கச் சொல்வேன்.

தர்கா இதழ் ஒரு அரிய பொக்கிஷம். படித்துவிட்டு பாதுகாக்கப் படவேண்டிய தகவல் அடங்கிய பொக்கிஷம். தர்கா இதழை தொடர்ந்து படித்தால் மார்க்க விஷயங்களை தெரிந்துகொள்ளவும் மார்க்க விஷயங்களை தெரிந்து கொண்ட மார்க்க அறிஞர் ஆகலாம் என்பதில் சந்தேகமில்லை.

தர்கா இதழ் குழப்பவாதிகளையும் சூழ்ச்சிக்காரர்களையும் அடையாளம் காட்டும் கருவி. அவர்களை எதிர்த்து போராடும் இரும்புக் கரம். தர்கா இதழ் படித்துவிட்டு மூலையில் வீசிவிடக் கூடியது அல்ல. படிக்கவும், படித்த விஷயங்களை மற்றவர்களுக்கு எத்தி வைக்கவும் போதுமானது. அதே சமயம் படித்த இதழ்களை பாதுகாக்கவும் கூட. அதாவது படிக்க! பாதுகாக்க!!

காரணம், நாம் மட்டும் படித்து தெரிந்து கொண்டால் போதாது. இதை பாதுகாத்து வைப்பதினால் நமது சந்ததிகளுக்கும் பயன்படும். நான் இதுவரை படித்த இதழ்களை பாதுகாத்து வருகிறேன். மற்றவர்களுக்கும் வாசிக்க தருகிறேன்.

குழப்பவாதிகள் தங்களுக்கே உரித்தான பாணியில் புருடா-கரடி விடும்போது தர்கா இதழில் உள்ள விஷயங்களை எடுத்துக் கூறி பதிலடி தர பேருதவியாக இருக்கிறது.

தர்கா இதழ் ஒரு கலங்கரை விளக்கம்! நல்ல வழிகாட்டி! தர்கா இதழை வாழ்த்த நான் தகுதியற்றவன். ஆனால் தர்கா இதழை படிக்க படிக்க நானும் தகுதியுடையவன் ஆகிவிடுவேன் போலும்!

தர்கா இதழின் முன் பக்கம் தங்கள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன என்று அச்சிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த எளியோனின் ஒரு சிறிய தாழ்மையான வேண்டுகோள் யாதெனில்...

**படிக்க...! பாதுகாக்க...!**

என்கிற வாசகம் இடம்பெற்றால் நன்றாக இருக்கும்.

தங்களுக்கு ஆலோசனை கூற எனக்கு அருகதையில்லை இருப்பினும் இந்த எளியோனின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன். இத்துடன் தர்கா இதழ் நன்கொடையாக ரூ.1000/- M.O அனுப்பியுள்ளேன்.

எனது பெற்றோர் மர்ஹூம் ஜனாப் R.அமீர் கான் மர்ஹூமா சாபிரா பேகம் சாஹிபா அவர்களுக்கு துவா செய்யவும்.

**MUNNA@ A.MUNAWAR KHAN**
**28.01.2010. சேலம்.**

(தங்கள் பெற்றோர்களின் மறுமை சிறக்க வலிமார்களின் வஸீலாவால் துஆ செய்கிறோம். வஸ்ஸலாம்- ஆசிரியர்.)

கௌரவ ஆலோசகர் :
**சையத் மத்தீன் அஹமத் சக்காப், B.E.,**

நிருபர்கள் :
**உஸ்மான் சேட், B.Com.,**
**சையத் அப்துல் காதர், M.S., (I.T)**
**ஹாபிஸ் ருஸ்தும் அலி (உருது)**
**நிஸார் அஹ்மத் B.E., பாஜில் அஹமத் கான்.**

துபாய் நிருபர்கள் :
**ஷேக் இஸ்மாயில், M.B.A.,**
**பாரிஸ் அஹ்மத் கான்.**